# கடலின் நடுவில்...


(கடலில் மூன்று மீனவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை விளக்கும் நாவல்)



கலாநிதி கே. எம்.எம். இக்பால்

# கடலின் நடுவில்

(நாவல்)



ஆக்கம் :

கலாநிதி. கே.எம்.எம்.இக்பால்

# நூல் விபரம்


நூலின் பெயர் : கடலின் நடுவில் (நாவல்)

நூலாசிரியர் : கலாநிதி. கே.எம்.எம். இக்பால்

முதற்பதிப்பு : 25 மார்கழி 2008

பதிப்புரிமை : ஜாஹிறா இக்பால்

வெளியீடு : லங்கா புத்தக சாலை
F.L. 1/14 டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு 12.

தொலைபேசி இல.
011 - 2341942
பெக்ஸ் இல.
011 - 2459431

விலை : ரூபா 150.00

# காணிக்கை....

எனது பெற்றோராகிய மர்ஹூம்களான

**கச்சி முகம்மது – கமீதும்மா**

ஆகியோரைப் ஈன்றெடுத்த

மர்ஹூம்களான

**முகம்மது மதார் – சாறா உம்மா**

ஆகியோருக்கும்,

**செய்யது முகம்மது – தங்கமுத்து**

ஆகியோருக்கும்,

இந்நூல் .......

*காணிக்கை*

# வார்த்தைகளின் ஆலாபனை

இந்நூலாசிரியர் கலாநிதி கே.எம்.எம்.இக்பால் தமிழ் இலக்கிய உலகிற்கு மற்றும் ஒரு தரமான படைப்பை தந்து பெருமை பெறுகின்றார். கடலின் நடுவில் என்ற இந்த நாவலுக்கு முன்பு காட்டு ராஜா, நடுக்கடலில், பாட்டி சொன்ன நீதிக் கதைகள், விடிவெள்ளி, கவிநயம், மரணத்தின் விளிம்பில், தியாகி, தாய்மை முதலிய நூல்களில் ஆசிரியரின் அற்புதமான எழுத்தாற்றலைக் கண்டு நாம் களிப்புற்றோம்.

(Fiction என்னும்) கற்பனைக் கதைக்குரிய நறுக்குத் தெறித்தாற் போன்ற வசனங்கள், அலங்கார வார்த்தைகளால் நடத்தும் ஆலாபனை, எந்த வாசகரையும் தன் பால் ஈர்க்கும் மந்திரசக்தி வாய்ந்த வார்த்தைகள், முற்கூட்டியே சிந்திக்க முடியாத வியப்புமிக திருப்பங்கள்.... இவை அனைத்தும் இந்நாவலில் பொதிந்துள்ளன.

சரவணன், சேகுத்தம்பி, இஸ்மாயில் ஆகிய முக்கிய மூன்று பாத்திரங்களைக் கொண்டு கடலின் நடுவில் என்ற இந்த நாவல் புனையப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆசிரியர் இன ஒற்றுமையையும் வலியுறுத்தியுள்ளார். ***"ஆபத்திற்கு உதவுவதில் மதம், மொழி என்பன தடைகளாக அமையாது"*** என்று இந்நாவலில் இடம் பெறும் வாசகம் (பக்கம் 14) எதிர்காலத்தில் திகழ இருக்கும் ஐக்கிய இலங்கைக்கான உறுதியான அடித்தளமாக அமைகின்றது.

இந்நாவலில் படகு திசைதிரும்பி ஆழ்கடலுக்கு சென்றதிலிருந்து, ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு யுகமாய்க் கழிந்தது. மீனவர்கள் பெற்ற திகில் அனுபவங்களை இந்நூலை வாசிக்கும் நாங்களும் பெறுகின்றோம்.

வாழ்வு அநித்தியமானது. அதுவும் தரைமேல் பிறக்கவைத்து கடல் மேல் பிழைக்க வைக்கும் வாழ்வோ, மிகவும் அநித்தியமானது என்பதனை இந்நூல் நன்கு விளக்குகிறது.

"எழுத்து மனிதனை மகிழ வைக்காதவரை அது இலக்கியமாகாது (Writing is not Literature, unless it gives to the reader a pleasure)" என்ற கூற்றின் அடிப்படையில் நோக்கும் போது, எம்மைப் பரவசப்படுத்தும் இந்நூல் சிறந்த இலக்கியமாகவே கருதுகின்றேன்.

கலாபூஷணம். கிண்ணியா ஏ.எம்.எம்.அலி,
கிண்ணியா 05.

# அணிந்துரை

கடலின் நடுவில் என்னும் புதினம், கலாநிதி கே.எம்.எம்.இக்பாலின் பத்தாவது புனைவு நூல். கல்வி சார் துறைகளில் முப்பத்து மூன்றாவது நூல். வெளியீடு தொடர்பில் உறவுள்ளவர்களுக்குத் தெரியும் வெளியீட்டு வலி.

நாவல் என்னும் போது திருகோணமலை மாவட்டம் நூமோகனாங்கியில்பூ ஆரம்பமாகின்றது. வ.அ.இராசரத்தினம், ந.பாலேஸ்வரி, அருள் சுப்ரமணியம், தாபி. சுப்பிரமணியம் என அதன் வரலாறு தொடர்கிறது. அந்த இடத்தில் இந்த நாவல் ஆசிரியரும் இணைகின்றார்.

இந்த நாவலின் உள்ளடக்கம் ஒரு உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது. எனினும் அதன் சுவைகருதி பல அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

கொட்டியாரப் பிரதேச வழக்காற்றுச் சொற்களும், மீன்பிடித் தொழில் முறையும், மீனவ வாழ்க்கை முறையும், இனக் கூட்டு வாழ்க்கையும் எம்மை இந் நாவலை சுவைக்க வைக்கின்றன.

அவரின் பணி இன்னும் புத்தக உலகத்திற்குத் தேவை.

- எம்.எஸ்.எம்.நியாஸ் -
பதிவாளர்,
மாவட்ட நீதி மன்றம்,
திருகோணமலை.

# என்னுரை....

சிறிது காலத்திற்கு முன்பு தினகரன் பத்திரிகையில் வந்த ஒரு செய்தி, என்னை இந்த நாவல் எழுதத் தூண்டியது. கடலுக்கு தொழிலுக்குப் போன மூவர், படகின் இயந்திரம் சதிசெய்ததால் கடலில் சில நாட்கள் தத்தளித்தனர். அம் மூவருள் இருவர் இறந்து விட, எஞ்சியவர் (ஜனாப். அபூபக்கர்) அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் உதவியுடன் தாயகம் மீண்டார். இச்செய்தியே இந்நாவல் உங்கள் கரங்களில் தவழ காரணமானது.

கவிதை, சிறுவர் இலக்கியம், சிறுகதை என பல துறைகளிலும் நூல்களை எழுதினாலும் நாவல் வடிவத்தில் ஒரு நூலை எழுத வில்லை என்ற ஆதங்கம், என் மனதில் நீண்ட நாட்களாக இருந்தது. கிண்ணியா கல்வி அலுவலகத்தில் என்னோடு பணியாற்றிய ஜனாப். எம்.ஐ.முத்தலிப் அவர்கள் "நீங்கள் ஒரு நாவல் எழுத வேண்டும்" என்று என்னை பல தடவைகள் வற்புறுத்தினார். அந்த வற்புறுத்தலின் வெளிப்பாடே, இந்த நாவலாகும்.

இயந்திர யுகம் என்றழைக்கப்படும் இன்றய உலகில், வாசிப்பதற்கு நேரமில்லாதவர்களாக, மக்கள் உள்ளனர். அதுவும் நீண்ட கதையைக் கொண்ட நாவல்களை ஒரு சிலரே வாசிக்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இந்த நிலையைக் கருத்திற் கொண்டே, இந்நூலை மிக எளிமையாகவும், ஓரளவு சிறியதாகவும் ஆக்கியுள்ளேன். தமிழ் நாவல் இலக்கியம் என்ற பரந்த கடலிலே, எனது சிறிய இந்நாவலையும் சங்கமிக்க வைத்துள்ளேன்.

இந்நூலை கணனி எழுத்தில் பொறித்துத்தந்த (அல் அக்ஷா ம.வி. - தமிழ் ஆசிரியர்) ஜனாப். அஸீஸ் அவர்களுக்கும், ஜனாப். அ.அஸ்ரப் அலி அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய கலாபூஷணம் ஏ.எம்.எம்.அலி அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய இலக்கிய ஆர்வலர் ஜனாப் எம்.எஸ்.எம்.நியாஸ் அவர்களுக்கும் இதனை விநியோகம் செய்யும் கொழும்பு லங்கா புத்தகசாலை நிறுவனத்தினருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.

கலாநிதி. கே.எம்.எம்.இக்பால்

கட்டையாறு,
கிண்ணியா 04.
01.12.2008
026 – 2236931

# கடலின் நடுவில்.....

“என்னங்க.....” கிணற்றுக்குள்ளிருந்து ஒருவர் கூப்பிடுவதுபோல இஸ்மாயிலுக்கு இருந்தது.

“என்னங்க மூனு மணியாகிட்டது.....” இப்போது குரல் அவருக்கு பரிச்சியமான குரல்போல இருந்தது. எனினும் நித்திரை மயக்கத்தில் குரலை சரியாக அவர் அடையாளம் காணவில்லை. கையை வைத்து இரண்டு மூன்று தடவைகள் அவரை உருட்டிய பின்புதான்..... மனைவிதான் என்னை எழுப்புகிறாள் என்று விளங்கியது. இப்போது இஸ்மாயில் நன்கு விழித்து விட்டார். ஆனால்..... எழும்பவில்லை.

எழும்ப வேண்டும் என்று அறிவு சொன்னது.

ஆனால்.... ,இன்னும் கொஞ்சநேரம் நித்திரையை அனுபவி என்று குளிர்காற்று சொன்னது.

அவர் எழும்பாமல் புரண்டு புரண்டு படுத்ததைக் கண்ட லரீபா, “இப்ப என்ன நேரம் என்டு தெரியுமா....?” என்று கேட்டாள்.

“ம்.... ம்.....” என்று மெதுவாக பதில் அவர் கூறினார்.

ஐந்து நிமிடங்கள் அமைதி ஆட்சி செய்தது.

அந்தவேளையில் பக்கத்து காணிகளில் இருந்த தவளைகள், ஒருவகை ஒலியை காற்றலைகளில் தவழவிட்டன.

அந்த ஒலியிலும், இசையின்பம் இழையோடியது.

ஐந்து நிமிடங்களில்......

மீண்டும் லரீபாவின் குரல்.....

“மணி என்ன தெரியுமா.... ?”

என்ன என்பது போல, இஸ்மாயில் அவளைப் பார்த்தார்.

“இப்ப மணி நாலரா”

லரீபா நேரத்தைச் சொன்னதும், அவர் பதறி எழுந்தார். கடற்கரையில் .......

அவர்களது படகு புறப்பட, இன்னும் முப்பது நிமிடங்களே இருந்தன.

முப்பது நிமிடங்களுக்குள் அவர் புறப்பட வேண்டும். அவசரத்தில் என்ன செய்வது என்று அவருக்குப் புரியவில்லை. ஒரே தடுமாற்றமாக இருந்தது.

'ஏன் நேரத்திற்கு எழுப்பவில்லை?' என்று லரீபாவை, அவரால் கடிந்து கொள்ள முடியாது.

அவள் பல முறை எழுப்பியிருப்பாள்.

அவர்தான் எழுந்திருக்கவில்லை.

'தேநீர் குடித்துவிட்டு, கிணற்றடிக்குப் போவதா? அல்லது கிணற்றடிக்குப் போய் வந்தபின்பு தேநீர் குடிப்பதா?'' என்பதிலும் அவருக்குத் தடுமாற்றம்.

பிந்தி எழுந்ததால் ஏற்பட்ட விளைவு இது.

ஆவி பறக்கும் தேநீரை அருந்திவிட்டு, கிணற்றடிக்குப் போனால் எல்லாமே ஆனந்தமாய் நிறைவேறும்.

வழக்கத்திற்கு மாறாக....

தேநீர் அருந்தாமலே, கிணற்றடிக்குப் போனார்.

எதுவும் எதிர்பார்த்த வண்ணம் அமையவில்லை.

ஐந்து மணிக்குக் கடற்கரைக்குச் சென்றுவிட வேண்டும் என்ற எண்ணமே, அவர் மனதில் மேலோங்கி இருந்தது.

சமையலறைக்குள் எட்டிப்பார்த்தார்.

லரீபா சாப்பாட்டைக் கட்டிக்கொண்டிருந்தாள்.

கம... கம.... என்ற வாசனை, அவரை சுண்டி இழுத்தது.

லரீபாவின் கைகளுக்கு இத்தனை ஆற்றலா.....?

“மச்சான் உன்ட மனுசியோட சாப்பாட்ட சாப்பிடுவதற்கு நாங்க குடுத்து வைக்கணும்.....'' என்று அவருடன் கடலுக்கு வரும் சரவணன் முன்பு சொன்னது, அவருக்கு ஞாபகத்திற்கு வந்தது.

லரீபா தந்த தேநீரைக் குடித்துவிட்டு, கொண்டு போகும் பொருட்களை ஒழுங்குபடுத்தத் தொடங்கினார்.

சூள்லாம்பு, தங்கூசி, அத்தாங்கு, கத்தி, மண்ணெண்ணெய், தூண்டில், ஈயம், பறி, தேயிலை, சீனி, சொப்பிங்பேக் போன்றவற்றை எடுத்துவைத்தார்.

மனதில்..... ஒரு மூலையில்......

"ஏதோ பொருளைத் தவறவிட்டோம்...." என்ற எண்ணம், அவருக்கு ஏற்பட்டது. ஆனால் எந்தப்பொருளைத் தவறவிட்டேன் என்பது தான் பிடிபடவில்லை.

பல தடவைகள் முயன்று பார்த்தார்.

அது ஞாபகத்திரையில், தோன்றத் தொடர்ந்தும் மறுத்தது.

அது என்ன பொருள் என்பதைக் கண்டுபிடிக்க, லரீபாவிடம் கேட்பதுதான் சரியான வழி, என்ற முடிவுக்கு வந்தார்.

லரீபாவை அழைத்தார்.

"லரீபா.... கொண்டுபோற சாமானெல்லாம் எடுத்து வைச்சிருக்கேன். ஆனா... ஏதோ ஒன்ன மறந்திட்டேன் போல இருக்குது. உனக்கு ஞாபகம் வருதா...."

"ஒங்களுக்கு சரியான மறதி. போன கெழம தண்ணி எறக்கிற கேண வெச்சிட்டுப் போய்ட்டீங்க.... இன்டைக்கு என்ன பொருளோ....? தெரியாது. உங்கட சாமான்களைக் காட்டுங்க பார்ப்போம்."

அவளை பொருட்கள் உள்ள இடத்திற்கு, கூட்டிச் சென்றார். ஒவ்வொரு பொருளாக லரீபா நோட்டமிட்டாள். அவளது சிந்தனை ரேகைகள் நன்கு செயல்பட்டன என்பதை, அவளுடைய முகம் எடுத்துக்காட்டியது.

"இதுக்குள்ள இல்லாதது... ஜீனிப்பல், மண்டாப் பொல்* பிளாஸ்டிக் கேன், நெருப்பெட்டி, தண்டுமரம், சவல் ...."

---

* பிடிபட்ட பெரியமீன் கட்டுக்கடங்காமலல் இருந்தால், அதனை அடித்து அடக்குவதற்கு, பயன்படுத்தும் பொல்லே, மண்டாப் பொல்லாகும்.

என்று அவள் அங்கில்லாத பொருட்களை அடுக்கிக்கொண்டு போனாள். அவள் சொல்லச் சொல்ல, அவருக்கு மலைப்பாக இருந்தது. கடலுக்குப் போகும் அவருக்கே இவையெல்லாம் ஞாபகத்திற்கு வரவில்லை.......

இவளுக்கு எப்படி.......?

அவர் மறந்தது மண்டாப்பொல். அதனை எடுத்து அலுமாரிக்குப் பின்னால் வைத்தது, இப்போதுதான் அவருக்கு ஞாபகத்திற்கு வந்தது.

லரீபாவுக்கு மனதால் நன்றி தெரிவித்துவிட்டு, மண்டாப்பொல்லை எடுத்து வந்து, அதனை ஏனைய பொருட்களோடு வைத்தார். லரீபா சொன்ன ஏனைய பொருட்களை, சரவணன் கொண்டு வருவார்.

இப்போது....... நேரம் நான்கு மணி ஐம்பது நிமிடம்.

லரீபா வாசலில் நின்று வழியனுப்ப,

ஒரு கையில் சாப்பாட்டுப் பொதியுடனும்,

மறுகையில் ஏனைய பொருட்களுடனும், அவர் வீட்டிலிருந்து புறப்பட்டார்.

நேரம் நன்கு பிந்தி விட்டதனால், அவர் வழமையான வீதியில் செல்லாமல், குறுகிய பாதையால் செல்லலாம் என்று தீர்மானித்தார். ஐந்து மணிக்குள் கடற்கரைக்குப் பேவதற்கு, இதுவே ஒரே வழி. அது ஒற்றையடிப்பாதை, அது நல்ல பாதையல்ல......., எனினும் அவருக்கு வேறு ஒருவழி தெரியவில்லை. கொஞ்ச நேரம் சென்ற பின்புதான்....... இவ்வழியால் வரத் தீர்மானித்தது தவறு என்று, அவருக்கு விளங்கியது.

நேற்றுப் பெய்த மழையின் காரணமாக, பாதை சேறும், சகதியுமாக இருந்தது. நிலத்தில் கால் நன்கு புதைந்தது. மிகவும் கவனமாக ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க வேண்டி

இருந்தது. பாதிதூரம் கடந்த பின்பு, நேரம் பிந்தி விட்டது என்ற எண்ணம் தலைதூக்கியதால், வேகமாக நடக்கத் தொடங்கினார்.

மறுகணம் ......., நிலை தடுமாறி கீழே விழுந்தார்.

அவரது ஒரு கையிலிருந்த மண்டாப்பொல்லும், ஏனைய பொருட்களும் கீழே விழுந்தன. உணவுப் பொதியை மட்டும், விழாமல் பிடித்துக் கொண்டார். அவர் உடம்பெல்லாம் சகதிபடிந்தது, அவர் ஒருவாறு சுதாகரித்து எழுந்தார். கீழே விழுந்த பொருட்களையெல்லாம் பொறுக்கினார். திரும்பவும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தொடர்ந்தும் நடந்தது.

ஒருவாறு கடற்கரையை அடைந்தார்.

கடற்கரை பகல் நேரச்சந்தை போல விளங்கியது. மீன்பிடிப்படகுகள் யாவும் கடலை நோக்கிய தமது பயணத்தை ஆரம்பிக்க, ஆயத்தநிலையில் இருந்தன. அவர்களது படகு, வழக்கமாகப் புறப்படும் இடத்தை அவர் அடைந்தார். அவரது கோலம் அங்கு நின்றிருந்த சரவணனையும், சேகுத்தம்பியையும் வேதனைக்குள் ஆழ்த்தியது. அவர்கள் இஸ்மாயிலின் உடலையும், உடைகளையும் கடல் நீரைக் கொண்டு சுத்தப்படுத்தினார்கள். ஒவ்வொரு படகும் ஆழ்கடலை நோக்கி பயணித்தது. நேரம் செல்லச் செல்ல....... ஓங்கி ஒலித்த மீனவர்களின் ஆரவாரம், மெல்ல மெல்ல தணிய ஆரம்பித்தது. அவர்களது படகோடு மூன்று படகுகளே கரையில் மீதமிருந்தன.

“என்ன குமாரை இன்னுங் காணல்ல” பொறுமையிழந்த சேகுத்தம்பி கூறினார்.

“எப்படியும் வந்துவிடுவார்....... இன்னும் கொஞ்ச நேரம் பாப்பம்” இஸ்மாயில் சமாதானப்படுத்தினார்.

ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு யுகமாய் நகர்ந்தது.

கரையிலிருந்த ஏனைய இரண்டு படகுகளும், பயணமாயின.

இப்போது.......

அவர்களது படகு மட்டும்தான், அந்த அகன்ற கடற்கரையில் இருந்தது.

நேரம் ஆகிவிட்டதே என்ற கவலை, அவர்கள் மூவரையும் ஆட்கொண்டது.

குமார்தான் காலை உணவையும் பெற்றோலையும் கொண்டு வருவதாகச் சொன்னார். உணவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை.......

மோட்டாருக்கு....... அதை இயங்கவைக்க பெற்றோல் வேண்டும்....... "சேகுத்தம்பி .......நீ இங்கேயே இரு.......நானும் சரவணனும் குமாரைப் பாத்திட்டு வாறம் ......." என்று கூறிய இஸ்மாயிலை, சரவணன் பின் தொடர்ந்தார். அங்கிருந்து ஒருவரிடம் பெற்ற சைக்கிளில், அவர்கள் இருவரும் குமாரின் வீடு நோக்கி பயணமானார்கள்.

ஏதாவது பிரச்சினை என்றால்தான், குமார் உரியநேரத்திற்கு வராமல் இருப்பார் .......

அவருக்கு ஏதாவது.......

அவர்களது உள்ளங்களில் சிந்தனை ஓட்டங்கள் வானம் போல நீண்டு விரிந்து....... சென்றன.

இரண்டு வருடங்களுக்கு முன்பு, கடலில் நடந்த ஒரு சம்பவம் இஸ்மாயிலுக்கு ஞாபகம் வந்தது. அவர்கள் கடலில் போட்ட வலையை படகுக்குள் இழுத்துக்கொண்டிருந்தார்கள். மீன் தப்பி ஓடாதிருக்க குமாரும் இஸ்மாயிலும் கடலில் பாய்ந்து, மீனை தடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அவ்வேளையில் .......

இஸ்மாயிலின் காலை ஏதோவொன்று கடித்தது.......

அது மீனா அல்லது வேறு ஏதாவது ஒன்றா? என்பது தெரியவில்லை.

நேரம் செல்லச் செல்ல.......

கடுப்பு அதிகமாகியது.

"குமார் .......குமார் ......." என்று அவர் கத்தினார் .......

குமார் மீனை விரட்டுவதிலேயே குறியாக இருந்தார்.

இஸ்மாயிலுக்கு உணர்வு குறைவது போல் இருந்தது.

அவரை மெல்ல மெல்ல கடல்நீர் அடித்துச் சென்றது.

மரணத்தை நோக்கி இஸ்மாயில் நகர்ந்து கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் .......

திடீரென்று ஒரு கை, இஸ்மாயிலின் பின்னஞ்சட்டையைப் பிடித்து, இழுத்துச் சென்றது.

மறுநாள் பின்னேரமே, அவர் கண்விழித்தார்.

அவரைச் சுற்றிலும் .......

அவர் உறவுகளும் உடன் பிறவாத் தோழர்களும் .......

"நீ உயிரோடு இருப்பதற்கு குமாரே காரணம்......." என்று அனைவரும் கூறினர்.

இஸ்மாயிலின் நெஞ்சிருக்கும்வரை அது நினைவிருக்கும் .......

" இஸ்மாயில்..... உனக்கிட்ட காசி இருக்கா.......?

"என்ன சொன்னா.......?"

"நீ என்ன யோசனையில் இருக்கா.......?"

"உனக்கிட்ட இப்ப காசி இருக்கா.......? தற்செயலா காலச்சாப்பட்ட குமார் ஒழுங்கு செய்யாட்டி நாமளாவது வாங்கிட்டுப் போவணும்......."

"எனக்கிட்ட கொஞ்சம் காசி இருக்கு....... அத வச்சி சமாளிப்போம்......." என்று இஸ்மாயில் சொல்லி முடிக்கும் போது, குமாரின் வீடு வந்தது.

குமாரின் மனைவி....... வீட்டு வாசலில்....... கவலையோடு உட்கார்ந்திருந்தாள்.

அப்படியானால்....... குமாருக்கு....... உண்மையிலேயே....... அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் விஸ்வரூபம் எடுத்தது. மெல்ல....... மெல்ல....... தயங்கிய வண்ணம் ....... அவளை நெருங்கினார்கள்.

“குமார் எங்கே.......?” இஸ்மாயில் மெதுவாகக் கேட்டார்.

“ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கார் .......”

குமாரின் மனைவியின் பதிலால், அவர்கள் கலங்கிப் போனார்கள். சிறிது நேரம் மௌனம் ஆட்சி செய்தது.

அவர்களது இதயவானில், கவலை மேகம் முழுவதுமாகப் படர்ந்தது.

“ஆஸ்பத்திரிக்கா....... என்ன விசயம் .......?”

சரவணனுக்குத்தான் பேச தைரியம் வந்தது.

“பக்கத்து வீட்டு பாறூக் ஓடாவிக்கு சாமத்தில வாதம் வந்திட்டுது. அவர்ர மனுசி பதறி ஓடிவந்து, எங்கள எழுப்பினா....... வலது காலையும், வலது கையையும் இழுத்துப் போட்டுது. இவருதான் ஒரு ஆட்டாவிலே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனாரு. இன்னும் ஆளக்காணல்ல....... கடலுக்கு கொண்டு போக காலச்சாப்பாடு வேணும் என்டு அவர் சொன்னதால ரொட்டியும் சம்பலும் நான் செஞ்சி வைச்சிருக்கன். பெற்றோல் போத்தலும் இருக்கு. இன்னும் இவரக் காணல்ல....... இன்டைக்கு இவர் கடலுக்கு வரமாட்டார் போலிருக்கு....... நீங்க போங்க. அவர் வந்த நான் செல்றன்.......”

அவர்களது உள்ளத்தில் உறைந்திருந்த துயரச்சுமைகள் குறைந்தன. இப்போது....... அவர்களது மனதில் ....... குமார் பற்றிய மதிப்பு பல மடங்கு உயர்ந்தது. ஆபத்திற்கு உதவுவதில்....... மதம்....... மொழி என்பன தடைகளாக அமையாது என்பதை, குமாரின் செயற்பாடுகள் உணர்த்தின.

“நல்ல நண்பர்களைப் பெற்றோம்” என்ற சந்தோசத்தை உள்ளத்தே சுமந்து கொண்டும், பெற்றோல் போத்தலையும், காலைச் சாப்பாட்டையும் கைகளிலே சுமந்து கொண்டும், கடற்கரையை நோக்கி அவர்கள் பயணமானார்கள். குமாரின் சேவையை அறிந்து, சேகுத்தம்பியும் நெகிழ்ந்து போனார்.

உடனடியாக அவர்கள், பயணத்தை ஆரம்பித்தார்கள். வழமையான நேரத்தை விட இன்று, ஒரு மணித்தியாலயம் தாமதித்துப் புறப்பட்டார்கள்.

குமார் இல்லாதது, ஒருவித சோகச்சூழலை உருவாக்கியது. நன்றாக அவர்கள் பிந்தியதனால் அவர்களது படகு வழமையான வேகத்தைவிட, வேகமாகப் பயணித்தது. நீலக்கடலைக் கிழித்து, அவர்களது படகு சென்றதால், தோன்றிய வெள்ளலைகளைக் கொண்டகோடு, ஜெட்விமானம் ஆகாயத்தில் வரைந்த கோடுபோல, சில நிமிடங்கள் நிலைபெற்று மறைந்தது.

இராக்கடலுக்குப் போன வள்ளங்கள், இப்போது கரையை நாடி வந்து கொண்டிருந்தன. தனது செல்வங்களைக் கொள்ளை கொண்டு செல்லும் மீனவர்களையும் தன் அலைக்கரங்களால் தாலாட்டியும், வாழ்த்தொலி கூறியும் மனம் மகிழ்பவள், கடலன்னையைத் தவிர, வேறு யாராக இருக்கமுடியும்? அவர்களது படகு, எவ்வித ஆட்டமும் இல்லாது சீராகச்சென்றது. சரவணன் ஓட்டும் போது, வழமையாக ஆட்டம்போடும் படகும், ஆடாது அடங்கிவிடும்.

மலைபோலும் அலைகள் வரும் போதுதான், சரவணனின் திறமை பளிச்சிடும்.

சென்ற மாதம் நடந்த ஒரு நிகழ்வு, அவரது திறமையை வெளிப்படுத்தியது.

கடலில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது.........

திடீரென்று காற்றின் வேகம் அதிகரித்தது.

அலைகளின் தன்மையைப் பார்த்தவுடனேயே, சூறாவளி அல்லது மினி சூறாவளி வீசப்போகிறது என்பதை உணர்ந்து கொண்டார்கள். எந்த நேரத்திலும் மழை பெய்யும் போன்று இருந்தது. ஆனால் மழை பெய்யவில்லை.......... காற்றின் வேகம் அதிகரித்தது. அவர்கள் கரைக்குச் செல்லத் தீர்மானித்தார்கள்.

கரையை நோக்கிச் செல்லும் போது..........

தூரத்தில் ..........

ஒரு படகில் வெள்ளைக் கொடிபோன்ற ஒன்று அசைந்தது. அத்திசையை நோக்கி அவர்கள் கவனத்தைச் செலுத்தினார்கள். கொடி அவர்களை நோக்கி பலமாக அசைந்தது.

அதை நோக்கி அவர்கள் சென்றார்கள்.

அப்படகில் ஐந்து போர் இருந்தனர்.

படகில் அரைவாசிக்குத் தண்ணீர் நிறைநதிருந்தது. அதில் இருந்த ஒருவர்.

"பெலமா.......... காற்றடிக்குது.......... படகு ஓட்டமுடியல்ல.........." என்று அழுதழுது சொன்னார்.

எல்லோர் முகங்களிலும், மரணகளை தாண்டவமாடியது.

சரவணன் தனது படகிலிருந்து அவர்களது படகிற்குத் தாவினார். முதலில் படகில் இருந்தவர்களுக்கு, சரவணன் தைரியம் சொன்னார். அதனால், வாடியிருந்த பயிர்கள் வான்மழையைக் கண்டு மலர்ந்து துளிர்ப்பது போல, படகில் இருந்தவர்கள் வாட்டம் நீங்கி உற்சாகம் பெற்றனர்.

அவர்கள் துரிதமாக, நீரை இறைக்கும் பணியில் ஈடுபட்டார்கள். நீர் முழுவதும் இறைக்கப்பட்ட பின்பு,

சரவணன், படகின் இயந்திரத்தை இயக்கினார்.

உடன் அது இயங்க ஆரம்பித்தது.

பின்பு தனது படகில் இருந்தவர்களிடம், "இத நான் ஓட்டிவாறன் .......... நீங்க போங்க.........." என்று சொன்னார்.

இது போன்ற பல இடர்களை, தனது தைரியத்தினாலும், நுட்பத்தினாலும் சரவணன் வெற்றி கொண்டுள்ளார்.

அச்சம்பவத்திற்குப் பின்பு..........

கடல் பற்றி அச்சம் கொஞ்சம் கூட..........

அவரது சகாக்களுக்கு ஏற்படுவதில்லை. எப்படித்தான் கடலில் குழப்பம் ஏற்பட்டாலும், அதனை இலகுவாகக் கையாள ஒருவர் தங்களுடன் இருக்கின்றார், என்ற நினைப்பு அவர்களுக்கு ஏற்பட்டது.

இந்த விடயம் லரீபாவுக்கு தெரிந்தது........ முதல் அவளுக்கும் நிம்மதி.......... சந்தோசம்.

முன்பு..........

வழக்கமான நேரத்திற்கு கொஞ்சம் தாமதித்தாலும் அவள், பரபரப்படையத் தொடங்கிவிடுவாள், பலரிடம் விசாரிப்பாள்.

சரவணன் பற்றிக் கேள்விப்பட்ட பின்பு..........

எவ்வளவு நேரம் இஸ்மாயில் தாமதித்துப் போனாலும், அவளிடம் எவ்வித பரபரப்பும் ஏற்படுவதில்லை.

ஏழு மணியளவில்.........

படகில் சென்ற மூவரும் சேரவேண்டிய இடத்தை அடைந்தார்கள்.

படகில் இருந்த *ஜீனிப்பல்லை கடலுக்குள் இறக்கினார்கள். இந்த இடத்தில் கடலின் ஆழம், முப்பத்தைந்து பாகம் என்பது விளங்கியது. ஏனெனில் ஜீனிப்பல்லில் இன்னும் பதினைந்து பாகம் கயிறே மீதமாக இருந்தது.

முதலில் அவர்கள் ⊛அரிப்பை பயன்படுத்தி, சின்ன மீன்களைப் பிடித்தார்கள்.

சிறிது நேரத்திற்குள்..........

---

*ஜீனிப்பல் என்பது நங்கூரத்திற்குப் பதிலாக பயன்படுத்துவது. மரத்தால் செய்யப்பட்டது.

⊛தூண்டில் போடுவதற்குத் தேவையான இரையை (சின்னமீன்) பிடிக்கப்பயன்படுத்தும் சிறிய தூண்டில்

தேவையான அளவு சின்ன மீன்களைப் பிடித்தார்கள்.

நேரம் எட்டரையாகியதும்,

அவர்களுக்கு பசி ஏற்பட்டது.

அவர்கள் ரொட்டியையும், சம்பலையும் சுவைத்தார்கள்.

நான்கு பேருக்கு உரிய உணவு அது.

ரொட்டி மிகுதியாகும் என்று, முதலில் நினைத்தார்கள்.

பசியும், சம்பலின் சுவையும் ரொட்டிகள் அனைத்தும், காலியாகக் காரணிகளாக அமைந்தன.

"ஹேரத் முதலாளிக்கு இன்னும் எவ்வளவு கொடுக்கணும்..........."

சேகுத்தம்பி, இஸ்மாயிலிடம் கேட்டார்.

"இன்னும் நாம, அறுபத்திரெண்டாயிரம் கொடுக்கணும்..........

ஒவ்வொரு தடவையும் இருபத்தஞ்சி கிலோக்கு மேலே புடிச்சி வந்தா, கொஞ்ச நாளிலே, எல்லாக் கடனையும் குடுத்து முடிச்சிடலாம்"

"எங்க புடிக்கிற....... இந்த நேவிக்காரன் உட்டாத்தானே . ஒரு நாள்...... கடலுக்கு போங்க என்டு சொல்றான்......... ஒன்பது நாள் போக வேணாம் என்டு சொல்றான்......... இப்படி இருந்தா எப்படி கடன அடைக்கிற........ எப்படி சீவிக்கிற" வாழ்க்கையின் துயரம், சேகுத்தம்பியின் வார்த்தைகளில் இழையோடியது.

தூரத்தில் எதையோ பார்த்துக் கொண்டிருந்த சரவணன் "நமக்கு அமஞ்சது இவ்வளவுதான். இது கூட இல்லாம, எத்தனை பேர் இருக்காங்க. அதனால கடவுளுக்கு நாம நன்றி சொல்லணும்....".

அவர் பார்த்த திசையில்..........

கடல்நீரில் ஒரு மிதப்பு மிதந்து கொண்டிருந்தது.

அந்த மிதப்பிலே.........

இரண்டு கடற்குருவிகள் அமர்ந்திருந்தன.

ஒரு குருவி, தனது வாயில் உள்ள உணவை, மற்றக் குருவிக்கு ஊட்டிக்கொண்டிருந்தது.

பெரிய அலை வந்து, அந்த மிதப்பின் மேலால் பாயும்போது, அக்குருவிகள் சற்று மேலே பறந்து, மீண்டும் அந்த மிதப்பில் அமர்ந்து கொண்டன.

மூவரும் மீன்பிடிக்க ஆயத்தமானார்கள்.........

சில நிமிட இடைவெளிகளில், சிறுசிறு மீன்கள் பிடிபட்டன.

ஒரே அளவான பாரை மீன்கள் பிடிபட்டன.

ஒரு மீன், ஏறக்குறைய ஒரு கிலோ இருக்கும்.

பகல் இரண்டு மணியளவில்.........

அவர்கள் பகல் உணவை உண்டார்கள்.

உணவு உண்ணும்போது,

"இப்ப மகள் மருமகனோடதானா இருக்கிறா......?" என்று இஸ்மாயில், சேகுத்தம்பியைப் பார்த்து கேட்டார்.

"அவரோடதான் இருக்கிறா....... ஆனா........."

"என்ன விசயம்.......... ஏதும் பிரச்சினையா.........?"

"இவ்வளவு நாளும் ஒழுங்காத்தான் இருந்தாரு......... இப்ப முன்ன மாதிரி இல்ல........."

சாப்பிட்டுக் கொண்டிருந்த சரவணனும், இவர்களது பேச்சில் ஈடுபாடு காட்டினார்.

"என்ன விசயம்? எனக்கு விளங்கும்படி சொல்லுங்க ........."

சரவணனுக்காக, சேகுத்தம்பி சொல்லத் தொடங்கினார்.

"என்ட மூத்தமகள் சரீனாவுக்கு மூனு வருசத்துக்கு முதல்ல, கலியாணம் நடந்தது. இப்ப அவவுக்கு ஒரு வயதில் ஒரு பொடியன் இருக்கான். நம்மட மருமகன் றாசிக், தம்புள்ளக்குப் போய், மரக்கறி கொண்டு வந்து விக்கிற......... ஒரு வருசமா இதச் செஞ்சிக்கிட்டு இருக்காரு......... போன மாதம் ஆறாம் திகதி.......... மரக்கறியாவாரம் பண்ற எங்கட சொந்தக்காரப் பொடியன், என்னச் சந்திச்சி..........

"நான் ஒரு விசயம் சொல்றன்: நீங்க கோவிக்க கூடாது.........."

என்று சொன்னான்.

''சரி போவிக்கமாட்டேன் சொல்லு..........'' என்றேன்.

''உங்கட மருமகன் றாசிக், தம்புள்ளயில ரகசியமா கலியாணம் முடிக்கப் போறான் ........''

எனக்கு அடக்க முடியாத ஆத்திரம் வந்திச்சி. என்றாலும் அடக்கிட்டேன். ''உனக்கு எப்படி தெரியும்.........?'' நான் கேட்டேன்..........

''எனக்கு அந்த ஊரச்சேர்ந்த ஒரு ஆள்தான் சொன்னான் ......... அவ வெளிநாட்டுக்குப் போன பொம்பிளயாம் ......... அஞ்சி லட்சம் வரை பேங்கிலே காசி போட்டிருக்காவாம்......... நான் உங்கட நன்மைக்குத்தான் சொல்றன் .........''

இப்போது எனக்கு அவன் சொல்வது, உண்மையாக இருக்கும் என்று பட்டது.

நான் சற்று நேரம் மௌனமாக இருந்தேன்.

அவன் தொடர்ந்தான்.

''நான் இது சம்பந்தமா, மேலும் விசாரிச்சி உங்ககிட்ட சொல்றன்'' என்று சொல்லிவிட்டுப் போனவன், மூன்று நாட்களுக்குப் பிறகு வந்தான். அது ஒரு திங்கட்கிழமை. வந்தவன் மிக ரகசியமாகச் சொன்னான்.

''வாரவெள்ளிக்கிழம உங்கட மருமகன், கல்யாணம் முடிக்கப் போறாரு. கல்யாணத்த எப்பிடியும் தடுத்துப் போடுங்க.........''

என்று சொல்லி, தம்புள்ள விலாசத்தையும் தந்தான்.

கல்யாணம் நடக்கும் திகதியன்று, நானும் மகளும் தம்புள்ளைக்குப் போனோம்.

இறங்கியவுடன் ஒரு கடையில் சாப்பிட்டோம்.

பின்பு ஒரு ஓட்டோக்காரனிடம் விலாசத்தைக் காட்டி, 'இந்த இடத்திற்குப் போக எவ்வளவு பணம்' என்று கேட்டேன்.

“ஆ......... இந்த வீட்டில இன்டைக்கு கல்யாணம். நீங்க கல்யாணத்திற்குப் போறீங்களா.........?”

‘ஆமாம்’ என்று தலையாட்டிவிட்டு, எத்தனை மணிக்கு கல்யாணம் என்று கேட்டேன்.

“ஐந்து மணிமட்டில் கல்யாணம்” என்று அவன் சொன்னான்.

“நான்கு முப்பதுக்கு, நாங்க போகணும் வர ஏலுமா.........?”என்று கேட்டேன். அவன் ‘ஆமாம்’ என்றான்.

நான்கு முப்பத்தைந்தளவில் நாங்க ஆட்டாவில் ஏறினோம்.........” என்று சொன்ன சேகுத்தம்பி, சரவணனின் முகத்தைப் பார்த்தார். சரவணன் கதையில் லயித்தவராக........ வாயை ‘ஆ’ என்று விரித்தபடி இருந்தார்.........

“அப்புறம் என்ன......... நீங்க ஆட்டாவிலே போனீங்க........ பிறகு என்ன நடந்தது.........” அவனுக்கு முடிவைக் கேட்க, அதிக ஆவலாக இருந்தது.

“நாங்க ஆட்டாவிலே போய், கல்யாண வீட்டை நான்கு ஐம்பது அளவில் போய்ச்சேர்ந்தோம். மகளை கல்யாண வீட்டுக்கு வெளியே நிற்கச் சொல்லிவிட்டு, நான் உள்ளே போனேன். அங்குள்ளவர்களிடம், அங்கு வந்த ஊர்ப்பிரமுகர்கள் பற்றி விசாரித்தேன். பள்ளிவாசல் தலைவர் என்று அங்கிருந்த ஒருவரை, அவர்கள் சுட்டிக்காட்டினர். அவரை தனியே ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று, எனது மகள் விசயத்தைச் சொன்னேன்.

அவர் ஆச்சரியமடைந்து, வீட்டுக்கு வெளியே நின்ற, எனது மகளையும் கண்டு கதைத்தார்.

அவருக்கு உண்மை விளங்கியது.

அவர் பெண் வீட்டுக்கரர்களிடம், முதலில் விசயத்தைச் சொன்னார். அவர் விசயத்தைச் சொன்னதும், கல்யாண வீடு.........

அல்லோலகல்லோலப்பட்டது.

மருமகன் எல்லோருக்கும் மத்தியில், தலைகுனிந்து நின்றார். மருமகனிடம் பள்ளிவாசல் தலைவர், பல அறிவுரைகளைக் கூறினார்.'' என்று சேகுத்தம்பி கூறிவிட்டு கதையை நிறுத்தினார்.

“என்ன மனுசன் இவர் ........ இந்த நாளையிலே யாரையும் நம்ப ஏலா'' என்று சொன்ன சரவணன், “இப்ப மருமகன் எப்படி இருக்கார் .........'' என்று கேட்டார்.

“இப்ப நல்லாத்தான் இருக்கார் ........ எப்ப புத்திமாறுமோ தெரியா.........'' என்று சொன்ன சேகுத்தம்பி, திரும்பவும் தூண்டிலைப் போட ஆயத்தமானார்.

ஏனையோரும் அவ்வாறு ஆயத்தமானார்கள்.

இதுவரை பதினைந்து கிலோ அளவு பிடித்திருப்பார்கள். இன்னும் இரண்டரை மணித்தியாலங்கள் உள்ளன.......... இன்னும் பதினைந்து கிலோ பிடித்தாலும் போதும்........ சாப்பாட்டுக்குப் பின்பு மீன்பிடிப்பதற்கு நீண்ட நேரம் எடுத்தது.

சரவணனின் பார்வை, மீண்டும் பறவைகள் பக்கம் சென்றது.

சிறிது நேரத்தில் ........

ஒரு குருவி திடீரென்று பறந்து சென்றது........

சரவணனின் முகத்தை, இஸ்மாயில் அவதானித்தார். சோகரேகைகள், சரவணனின் முகத்தில் முற்றிலும் படர்ந்திருந்தன. சரவணன் பறவை பறந்த திசையையே வெறித்துப் பார்த்தபடி நின்றார். இஸ்மாயிலின் தூண்டிலில் திடீரென்று மீன் கொத்தியது. அவர் பரபரப்புடன் தங்கூசை இழுத்தார்.

பெரிய மீனாக இருக்க வேண்டும்.

ஆனந்த அலைகள், அவரது இதயத்தில் ஆர்ப்பரித்தன.

மீனை இழுத்துப் படகில் போட்டார்.

அது திருக்கை மீன் ....... அதைக் கண்டதும்

அவருக்கு ஏற்பட்ட ஆனந்தம் அடங்கிப் போனது.

திருக்கை மீன் பட்டால், இழுத்து எடுப்பது கஸ்ட்டம். மேலும் அதனை கூடிய விலைக்கு விற்க முடியாது. அப்போது கரைப்பக்கமாக, சிறிய அளவில் கருமுகில் தென்பட்டது. அது வந்து மழை பெய்வதற்குள், நாங்கள் போய்விடலாம். என்று இஸ்மாயில் கணக்குப் போட்டார்.

சேகுத்தம்பியும் வானத்தில் மெல்ல மெல்ல உருவாகும் முகிலை, அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தார்.

சரவணனின் கைகள், தங்கூசை ஆட்டிக் கொண்டிருந்தன. அவரது கண்கள், பறவை இருந்த இடத்தை நோக்கிய வண்ணமே இருந்தன.

அங்கே........

ஒரு குருவி மட்டுமே இருந்தது.

இக்குருவி, தன் துணை சென்ற திசையை நோக்கிய வண்ணமே இருந்தது.

'இரைதேடி வருகிறேன் ........ காத்திரு' என்ற கூறிவிட்டு பிரிந்து சென்ற தன்துணை, வரும் வழியை, விழிமூடாமல் அது பார்த்துக் கொண்டிருந்தது.

எதிர்பார்ப்பும், ஏமாற்றமும் எல்லா உயிருக்கும் பொதுவானவை.

"சரவணன் ........." இஸ்மாயில் மெதுவாக அழைத்தார்.

சரவணன் அப்பறவையைப் பார்த்த வண்ணமே........

"ம்......... என்ன.........?" என்று கேட்டார்.

"குருவி இன்னும் வரயில்லியா.........?"

"அதுதானே எனக்குக் கவலையா இருக்கு........ இரவைக்கி நித்திர வருமோ தெரியா." சரவணனனது குரல், அவரது உள்ளத்தில் ஆர்ப்பரிக்கும், சோக உணர்வை, துல்லியமாகக் காட்டிக் கொடுத்தது. எதையோ பறிகொடுத்தவர் போல அவர் இருந்தார்.

"இஸ்மாயில் ........." திடீரென்று சேகுத்தம்பி அலறினார்.

"என்ன........ என்ன........." இஸ்மாயில் பதறியபடி கேட்டார்.

“தங்கூசப் புடிக்க ........ ஏலா........ கையை வெட்டுது.........”

இஸ்மாயிலும் தங்கூசைப் பிடித்துப் பார்த்தார். அவராலும் கட்டுப்படுத்த முடியாதிருந்தது.

ஏதோ மிகப் பெரியமீன் போல இருந்தது.

சவரணன் சொன்னார்.

“இஸ்மாயில் ஜீனிப்பல்லைத் தூக்கு.........”

இஸ்மாயில் ஜீனிப்பல்லைத் தூக்கினார்.

சேகுத்தம்பி தங்கூசைப் படகில் கட்டினார்.

படகு மெல்ல மெல்ல நகர்ந்து சென்றது.

சரவணன் படகை மிக நிதானமாக கொண்டு சென்றார். ஏறக் குறைய முப்பது நிமிடங்களாக மீன், படகை இழுத்துச் சென்றது.

அவர்களுக்கு ஒருபுறம் பயமாகவும்........ இன்னொரு புறம் சந்தோசமாகவும் இருந்தது. பெரிய மீன் என்றால் பெருந்தொகை கிடைக்கும்.

முடிவில் ஒரு பாறைத்தீவுக்கு அருகில் சென்றதும், மீன் நின்றது.

“மீன் களைச்சிட்டுது போல........ இப்ப மூனுபேரும் இழுப்பம்” என்று சரவணன் சொன்னார்.

மூன்று பேரும், மீனை இழுக்க ஆயத்தமானார்கள், இஸ்மாயில் தங்கூசி கையை வெட்டுவதைத் தவிர்ப்பதற்கு, ஒரு சீலைத் துண்டைத் தேடி எடுத்தார்.

மூன்று பேரும் ஒரு மூச்சில் இழுத்தார்கள்.

மீன் கொஞ்சமும் அசையவில்லை

“விடாதீங்க........ இழுங்க........” சரவணன் தொடர்ந்தும் உற்சாகப்படுத்தினார்.

இரண்டு நிமிடங்களில் ........

மீன் அசைந்து கொடுத்தது.

இப்போது இழுப்பது இலகுவாக இருந்தது.

பத்து நிமிடங்கள் வரை இழுத்தார்கள்.

மீன் படகிற்கு அருகில் வந்தது.

மீனின் தலை நீருக்கு வெளியே தெரிந்தது.

அது அறுக்குலா மீன் ........

அவர்களுக்கு ஏற்பட்ட சந்தோசத்திற்கு அளவேயில்லை.

எப்படியும் ஐம்பது கிலோவுக்கு மேலிருக்கும். இதை விற்றால் அவர்களது கடன் அரைவாசியாக குறைந்துவிடும். ஆண்டவன் அருள் புரிந்திருக்கின்றான்.

எப்படி மீனைத் தூக்குவது.........?"

மீனை நீரில் இலகுவாக இழுக்கலாம்.

ஆனால் நீருக்கு வெளியே இழுப்பது கடினம்.

சரவணன் இரண்டு கம்பிகளை எடுத்தார். அவற்றை படகில் இருந்த துவாரத்தில் வைத்து வளைத்தார், ஒரு பகுதியில் மீனின் பூப்பகுதியைக் கொழுவி, அதனை இஸ்மாயிலிடம் கொடுத்தார்.

இன்னொரு கம்பியால் மீனின் மற்றப்பூவில் கொழுவினார்.

சரவணன் கையைக் காட்ட

மூன்று பேரும் ........ ஒரே மூச்சில் ........ மீனைத் தூக்கினார்கள்.

மீன் தட்டுத்தடுமாறி........

படகுக்குள் விழுந்தது.

நல்ல பெரியமீன்.

அவர்களுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி.

மகிழ்ச்சிக்கடலில் மிதந்து கொண்டிருந்த அவர்களது உடலில், மழைத்துளிகள் விழுந்தன.

கருமுகில்கள் எங்கும் நிறைந்துவிட்டமையால், கரைப்பகுதி இப்போது கண்ணுக்குப் புலப்படவில்லை.

மீன் ஆக்ரோசமாகத் துடிக்கத் தொடங்கியது.

சரவணன் காலால் மீனை அமுக்கிப்பார்த்தார்.

சிறிது நேரத்தின் பின்பு........ அது மீண்டும் துடிக்கத் தொடங்கியது.

இஸ்மாயில் வீட்டிலிருந்து எடுத்து வந்த, மண்டாப்பொல்லினால், சரவணன் மீனின் தலையில் அடித்தார்.

அதன் தலையில் ஒரு பகுதி நசுங்கியது. அதன் துடிப்பும் மெல்ல மெல்ல அடங்கியது.

மீனின் பிரச்சினைக்கு தீர்வு கண்டாகிவிட்டது.

வானம் நன்றாக இருண்டுவிட்டதனால்........

தூரத்தில் எதுவும் தெரியவில்லை.

பெரியமீனைப் பிடிப்பதில் கவனம் செலுத்தியதால், மற்றப்படகுகள் கரைக்குத் திரும்பியதையோ........

ஐந்து மணியானதையோ, அவர்கள் கவனிக்கவில்லை.

மழை மெதுவாகத் தூறத் தொடங்கியது. சேகுத்தம்பியின் முகத்தில் கலவரம், படர ஆரம்பித்தது.

"மழை புடிச்சா உடாது போலிருக்கு........ அதுக்குள்ள நாம போய்ச் சேர்ந்திடுவம் ........."

சரவணன் படகைச் செலுத்தினார்.

கரை விளங்கவில்லை

ஒரு திசையைப் பிடித்து, அவர் படகை ஓட்டினார்.

மேலும் இருபது நிமிடங்கள் படகு ஓடியது.

படகு கரையை நோக்கிச் செல்லவில்லை என்ற சந்தேகம், இஸ்மாயிலின் உள்ளத்தில் ஏற்பட்டது.

ஆரம்பத்தில் அவர் தனது சந்தேகத்தை யாருக்கும் சொல்லவில்லை. கரைக்குச் செல்லும் போது, வழக்கமாக அவர்கள் காணும், அடையாளங்கள் ஒன்றுமே வராததால், அவர் தனது சந்தேகத்தை, மற்றவர்களுக்குச் சொன்னார்.

"எனக்கும் சந்தேகமாக இருக்கு........ விடிஞ்ச பிறகு போவோம் ........." சரவணன் சொன்னார்.

இவ்வளவு நேரமும், கரையிலிருந்து ஆழ்கடல் நோக்கி சென்றிருக்கிறோம், என்பதனை நினைக்கும் போது ....... மூவருக்கும் உள்ளத்தில் திகில் ஏற்பட்டது.

படகு பெரும் அலைகளின் தாக்கத்தினால், நன்றாக ஆடிக் கொண்டிருந்தது.
மெல்ல மெல்ல........ இருள் ஆக்கிரமிக்கத் தொடங்கியது.
ஜீனிப்பல்லைப் போட்டுப் பார்த்தார்கள்.
தரையில் அது படவில்லை.
அதனால் அவர்கள் இப்போது இருப்பது, ஆழ்கடல் பகுதியிலேதான் என்பது உறுதியாகியது.
படகு அலைகளின் தாக்கத்தினால், மெல்ல மெல்ல நகர்ந்து செல்வது, அவர்களுக்கு விளங்கியது.
கரையிலிருந்து வெகுதொலைவில் ........
'ஆழ்கடல் பக்கமாக இருக்கிறோம்'
என்ற நினைப்பு,
அவர்களுக்கு அடிக்கடி வந்து அச்சமூட்டியது.
காரிருள் எங்கும் கவியத் தொடங்கியது.
படகில் இருந்தவர்கள், மங்கலாய்த் தெரிந்தார்கள்.
மெதுவாகத் தூறிய மழை, இப்போது பலமாகப் பெய்யத்தொடங்கியது.
அவர்கள் வழமையாக, ஐந்து மணிக்குத் திரும்பிவிடுவதால், படுக்கைக்குரிய ஆயத்தங்கள், அவர்களிடம் இருக்கவில்லை.
அறுக்குலா மீனை மிகப் பேராடி படகில் போட்டதனால், படகில் இருந்த பொலிதீன், மீன் இரத்தம்பட்டு ஒரே நாற்றமாக இருந்தது.
ஆபத்திற்குப் பாவமில்லை.
அவர்கள் மீனை ஒரு பக்கமாக இழுத்துப் போட்டார்கள், இன்னொரு பக்கமாக மூவரும் பொலித்தீனைப் பிடித்துக் கொண்டு, உட்கார்ந்தார்கள்.
மழை பலமாகப் பெய்தது.
மழை பெய்யும் சத்தம், மிகக்கடுமையாகக் கேட்டது.
பொலித்தீனில் சில துவாரங்கள் இருந்தன.

அதனூடாக மழைத்துளிகள், அவர்களது உடலில் விழுந்தன. நீண்ட நேரம், தொடர்ச்சியாக மழைபெய்து ஓய்ந்தது.

அவர்கள் பொலித்தீனை மடித்து வைத்தனர்.

இரவு பத்துமணி இருக்கும் ........

வானத்தில் நட்சத்திரங்கள், கொஞ்சம் கொஞ்சமாக முளைவிடத் தொடங்கின.

கருமுகில்கள் வானத்திலிருந்து மெல்ல மெல்ல விலகின. நட்சத்திரங்களின் ஒளியின் மூலம், படகில் இருந்த உருவங்கள் தெரிந்தன.

அலைகளின் ஆட்டத்திற்கு ஏற்ப, படகும் ஆடியது.

படகு மேலே செல்வதும் கீழே வருவதுமாக இருந்தது.

இராக்கடலுக்கு போனபோது........ இரவைக் கடலில் கழித்த அனுபவம், அவர்களுக்கு இருந்தது.

அவ்வேளைகளில் கடலில் இரவைக் கழிப்பது, அவர்களுக்கு பயங்கரமானதாக அமையவில்லை........

ஆனால்....... இன்றைய அனுபவம்........ எதிர்பார்க்காதது........

அறுக்குலா மீனைப் படித்த பரபரப்பும்,

பெய்த மழையும் ........ அவர்களை மோசமாகப் பாதித்தன.

மூன்று போரும் 'விடியும் பொழுது........

நல்ல பொழுதாக விடிய வேண்டும்' என்று

மனதிற்குள் பிரார்த்தித்தார்கள்.

மூன்று பேருமே........

நல்ல படியாக வீடுபோய்ச் சேர்ந்தால்,

இன்னென்ன விடயங்களைச் செய்வோம் என்று, நேர்த்திக் கடன் செய்து கொண்டார்கள்.

இஸ்மாயில் யாஸீன் சூறாவை பத்துத்தடவைகள் ஓதுவதாகவும், ஐம்பது ரக்கஅத்து சுன்னத்து தொழுவதாகவும் நேர்த்திக்கடன் வைத்தார்.

சேகுத்தம்பி குர்ஆனின் முப்பது ஜ_ஸ_க்களையும் முழுமையாக ஓதிமுடிப்பேன் என்றும் பத்து ஏழைகளுக்கு உணவு வழங்குவேன் என்றும் நேர்த்திக்கடன் வைத்தார்.

சரவணன் சுகமாக வீடுவந்த சேர்ந்தால் முருகன் கோயிலில் பொங்குவேன் என்றும், காளி கோயிலுக்கு பட்டுச்சேலை தருவேன் என்றும் நேர்த்திக்கடன் வைத்தார்.

நீண்ட நேரத்திற்குப் பின்பு........

களைப்பின் மிகுதியினால் ........

மூவரும் அசந்து தூங்கினார்கள்.

கிழக்கு வானத்தை, தனது அற்புத ஆற்றலால், இறைவன் வண்ணமயமாக ஆக்கினான்.

ஆதவனின் இளங்கதிர்கள் பட்டதனால், மேகங்கள் தங்க நிறத்தினால் ஆன, எழில் ஓவியங்களாக ஆகின. கதிரவனின் வருகையை வரவேற்பது போல, கடலன்னை தனது அலைக்கரங்களை அசைத்து நல்வரவு கூறினாள்.

கடலின் இரைச்சல், சூரியனுக்கான வாழ்த்துப் பாவாக அமைந்தது.

சூரியனின் கதிர்கள் முகத்தில் பட்டதும்

சரவணன் எழும்பினார்.

கண் விழித்ததும், சூழலின் பயங்கரத்தை உணர்ந்து கொண்டார்.

உடன் ஏனைய இருவரையும் எழுப்பினார்.

அவர்களும் எழும்பி சூழ்ந்திருந்த கடற்பரப்பைப் பார்த்தார்கள்.

கண்ணுக்கு எட்டிய தூரத்தில் ........

கரையோ, படகோ எதுவுமே காணப்படவில்லை.

“ஆழ்கடலுக்குள்........ அதிகதூரம் வந்துவிடவில்லை.........” என்றே அவர்கள் நம்பினார்கள்.

அதனால் எப்படியும், கரையை அடைந்த விடலாம் என்ற நம்பிக்கை, அவர்களுக்கு இருந்தது.

எது கரைப்பக்கம் என்பதில் ........

அவர்களுக்குள் ஒரு முடிவு எட்டப்படவில்லை.

சரவணனும், சேகுத்தம்பியும் ........

கரைக்குப் போகும் பக்கம் என்று ஒரு பக்கத்தைச் சொன்னார்கள்.

இஸ்மாயிலின் கருத்து வேறுவிதமாக இருந்தது.

இறுதியில் இஸ்மாயில் விட்டுக் கொடுத்தார்.

"கொஞ்சதூரம் ஓடுவோம் ........ கரைவராவிட்டால்

எதிர் திசையில் செல்வோம்" என்று மூவரும் தீர்மானித்தார்கள்.

சரவணன் இயந்திரத்தை இயக்கினார்.

அது இயங்கவில்லை........

பல தடவைகள் இயக்கிப்பார்த்தார்.

அது இயங்கவில்லை.

சரவணனைத் தள்ளி இருக்கச் சொல்லிவிட்டு,

சேகுத்தம்பி மிகப்பலமாக இழுத்து, இயக்கமுயன்றார்.

அது அசையவே இல்லை.

மூவரது முகத்திலும் கவலை படர்ந்தது.

யாருமே உதவிக்கு இல்லாத நேரத்தில்,

அதுவும் திசைதெரியாத ஆழ்கடலில்........

இயந்திரம் பழுதாவது........ நினைக்கவே அவர்களுக்கு அச்சமாக இருந்தது.

இறுதியாக இஸ்மாயில் முயன்றார்.

அவரது முயற்சிகளும்........ பலனற்றுப் போயின.

மூவரும்........

இயந்திரம் இயங்கும் என்ற நம்பிக்கையை இழந்தார்கள்.

பிரமை பிடித்தவர்கள் போல, அவர்கள் சிறிது நேரம் இருந்தார்கள்.

நேற்றிரவு........ வீடு திரும்பாததால்........

வீட்டில் ஏற்படக்கூடிய பரபரப்பை, மனக்கண் எண்ணிப்பார்த்தார்கள்.

ஆழ்ந்த கவலை, அவர்களை துவண்டுபோக வைத்தது.

வீட்டில் உள்ள மனைவி, பிள்ளைகள் ஒவ்வொருவரது முகமும் அவர்களது மனத்திரையில், நிழலாடியது.

'உண்மையாகவே பெரிய ஆபத்தில் சிக்கியிருக்கிறோம்' என்ற உணர்வை அவர்கள் பெற்றார்கள்.

இரண்டு மூன்று மணித்தியாலங்களாக........

சிந்திப்பதற்கும் திறனற்றவர்களாக, அவர்கள் இருந்தார்கள்.

இஸ்மாயில் தான் முதலில் பேசினார்.

"இப்படியே இருந்தா........ ஒன்னும் நடக்காது. நடக்கப் போறதப்பத்தி இனிமே யோசிப்பம்........"

சரவணனும் கதைத்தார்.

"கடவுள் எப்பிடி முடிவெடுக்கிறாரோ அப்படித்தான் நடக்கும். நம்மட கையில ஒன்னும் இல்ல........ எல்லாம் அவன் செயல் ......"

சும்மா இருப்பது பயனற்றது. உயிரைப் பாதுகாக்க ஏதாவது செய்ய வேண்டும். என்ற எண்ணம் இப்போது எல்லோருக்கும் ஏற்பட்டது. அலைகள் நிறைந்த ஆழ்கடலில், அவர்களிடம் உள்ள தண்டுமரமோ, சவலோ பயன்தராது. என்பது அனைவருக்கும் தெரியும்.

இஸ்மாயில் எழுந்து........

சூள் லாம்பைப் பற்றவைத்தார்

கேனில் இருந்த நீரை, ஒரு சொப்பிங் பேக்கினுள் ஊற்றினார். சோப்பிங் பேக்கிலுள்ள நீரை, சூள்லாம்பின் சூட்டில் கொதிக்க வைத்தார்.

கொதித்த நீரில், சிறிது தேயிலைத் தூளைப் போட்டார்.

பின்பு அதனுள், சீனியைப் போட்டுக் கலந்தார்.

அத்தேநீரை மூவரும் அருந்தினர்.

வாடிய பயிர்களுக்கு, வான்மழை கிடைத்தது போல,

பசியால் வாடிய அவர்களுக்கு, அத்தேநீர் தேனாக இனித்தது.

உடலில் தெம்பும், உள்ளத்தில் உற்சாகமும் ஏற்பட்டன.

சேகுத்தம்பி கத்தியை எடுத்து,

பிடித்த பாரை மீன்களை, இரண்டு இரண்டாக வெட்டினார். மீனுக்குள் இருந்த குடல் முதலியவற்றை அகற்றி, சுத்தப்படுத்தினார்.

பின்பு அவற்றை........

படகில் பரப்பி வைத்தார்.

நல்ல வெயில் விழுந்தால்,

அவை இரண்டு மூன்று நாட்களில் கருவாடாகிவிடும்.

இஸ்மாயிலும் கத்தியை எடுத்து........

அறுக்குலா மீனை துண்டு துண்டாக வெட்டினார்.

எல்லா மீன் துண்டுகளையும், காயவைக்க படகில் இடம் இல்லாதிருந்தது. இதனால் பாதி அறுக்குலா மீனை, கடலில் தூக்கிப்போட்டார்.

அதை வைத்தாலும் நாறிவிடும்.

மத்தியானம் வழக்கத்தைவிட , அதிக வெயிலடித்தது.

மீன் காய்வதற்கு ஏற்ற வெயில்.

மூவரும் கடும் வெயிலினால், பல சிரமங்களை எதிர்கொண்டார்கள்.

அடிக்கடி கடல்நீரை தலையில் தெளித்து, அதிக சூட்டைத் தணித்துக் கொண்டார்கள்.

அவர்களுக்கு நல்ல பசியாக இருந்தது.

சரவணன் கொண்டு வந்த சில பிஸ்கட்டுக்களே, சாப்பிடுவதற்கு இருந்தன.

அவற்றை மூவரும் பகிர்ந்து உண்டார்கள்.

இன்றும் நாளையும் நல்ல வெயில் விழுந்தால், மீன்கள் காய்ந்து கருவாடுகளாக்கிவிடும்.

பின்பு சில நாட்களுக்கு சாப்பாட்டுப் பிரச்சினை ஏற்படாது.

கேனிலும் சிறிதளவு நீரே இருந்தது.

ஒரு நாளைக்கு மாத்திரமே அந்த நீர் போதுமாக இருந்தது.

இன்றும் நாளையும் கடும் வெயில் விழுந்தால்,
கருவாடு அவர்களது உணவுப் பிரச்சினையைத் தீர்த்துவிடும்.
மழை பெய்தால்........
குடிநீரைப் பெறலாம். ஆனால் கருவாடு பழுதாகிவிடும்.
அன்று முழுவதும் வெயில் எரித்தது.
காய்ந்து கொண்டிருந்த மீன்கள், நல்ல நிலையில் இருந்தன.
அவை மூன்று பேருக்கும் ஒரு கிழமைக்குப் போதும்.
காலை முழுவதும்........
நல்ல அமைதியுடன் இருந்த கடல்,
மாலையாகியதும்,
பெரும் ஓசை எழுப்பி ஆரவாரித்தது.
காலையில்........ கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் வெள்ளலைகள்........ அவற்றை துள்ளிவிளையாட விட்டு, மகிழ்ச்சி பொங்க அமைதியுடன் பார்த்திருந்த கடல் மங்கை........
தனது காதலன் கதிரவன் மறைவதனால் ஏற்பட்ட
துயரத்தை அடக்க முடியாததால்தான்,
இவ்வாறு சீறிச் சினக்கின்றாளோ?
கடல் மங்கையிலும் ஆயிரமாயிரம் மர்மங்கள் நிறைந்துள்ளன.
எப்போது அது சீறிச் சினக்கும் என்பதனை
யாராலும் அனுமானிக்க முடியாது.
கடல் மங்கையை தன் கதிர்க்கரங்களால், இதுவரைத் தடவிய களைப்பைத் தீர்ப்பது போல, கதிரவன் மேற்குப் பக்கமாக விரைந்து சென்றான்.
கதிரவனின் மனதை மயக்கும் நிறங்கள்,
மேற்கு அடிவானத்தை, அழகு கொஞ்சும் எழில் ஓவியமாக மாற்றின.
வானம் என்ற திரைச் சேலையில் .......
கதிர் என்ற தூரிகையினால்
கதிரவன் வரைந்த வண்ணக் கோலங்கள்,

கற்பனைக்கு விருந்தாக அமைந்தன.

சற்று நேரத்தில் இருள் படியத் தொடங்கியது.

மூவரும் நேற்றைய தினத்தைப் போலல்லாது, நம்பிக்கையுடன் தற்போது இருந்தார்கள்.

பகல் முழுதும் ........ கடும் வெயிலால் காய்ந்த அவர்களது உடல்களுக்கு, இரவு வீசிய குளிரான கடற்காற்று, இதமாக இருந்தது.

மாலையில் சீறிய கடல், இரவாகியதும் அடங்கியது.

கடலின் தாலாட்டினால், அவர்களது படகு மெதுவாக ஆடியது. அந்த ஆட்டம் மூவருக்கும் இதமாக இருந்தது.

இரவாகியதும் ........ வழக்கம் போல........

மூவரும் பிரார்த்தனைகளில் ஈடுபட்டார்கள்.

மனதால் இறைவனை வணங்க, இப்போது அவர்கள் பழகிக் கொண்டார்கள்.

சரவணன் மெதுவாக,

“செற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தாக் கைதொழ
கற்றுணை பூட்டியோன் கடலில் பாச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே”

என்ற தேவாரத்தைப் பாடினார்.

உள்ளங்கள் பக்குவப்பட்டதனால் பரபரப்பு, ஏமாற்றம் எதுவும் அவர்களுக்கு ஏற்படவில்லை.

உள்ளத்தில் அமைதி நிலவியதால், விரைவிலேயே தூக்கம் அவர்களது கண்களைத் தழுவியது.

மறுநாள் சூரியன் உதித்தபின்பே, மூவரும் விழித்தார்கள்.

இஸ்மாயில் சூள்லாம்பின் உதவியுடன், தேனீர் தயாரித்தார். பசித்திருந்த அவர்களுக்கு தேநீர், அமிர்தமாக இருந்தது.

தேநீர் தந்த உற்சாகத்தினால், அவர்கள் எழுந்து காயவைத்த மீன் துண்டுகளை, ஒழுங்குபடுத்தினார்கள். காயாத பகுதிகளை மேற்பக்கமாக வைத்தார்கள்.

எட்டுமணிக்கெல்லாம்

உடலைச் சுடக்கூடிய அளவு,

சூரியஒளி உக்கிரமடைந்தது.

முகிலற்ற வானம், நீலநிறத்தில் எங்கும் விரிந்திருந்தது.

சூரிய கதிர்களின் தாக்கத்தினால், பச்சையாக இருந்த துண்டுகள் எல்லாம், நன்கு காய்ந்தன.

மாலை ஐந்தரை மணிவரை........

அடிக்கடி கிளர்ந்தெழுந்த பசி என்ற பேரலையை, அவர்கள் அடக்கிக் கொண்டார்கள்.

வாழ்க்கையில் முதல் தடவையாக,

வெயிலில் காய்ந்த கருவாட்டை, சமைக்காமல் உண்டார்கள்.

எனினும் அது மிகவும் சுவையாக இருந்தது.

உடலில் இதுவரை அடங்கியிருந்த பசி........

கட்டுப்பாடில்லாமல் வெளிவந்தது.

அவர்கள் வயிறு நிறைய மீனை உண்டார்கள்.

ஆக்ரோசமாய் ஆரவாரித்த பசி அடங்கியது.

குடிக்க நீர் இல்லாதிருந்தது........ அவர்களுக்கு குறையாகவே தெரியவில்லை.

இந்த உணவு கிடைத்தற்காக, அம்மூவரும் இறைவனுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

அன்று இரவும் ........

வழக்கம் போல ........தேநீர் தயாரிக்க நீர் இருக்கவில்லை. மூவருக்கும் தேநீர் இல்லாதது........ என்னவோ போலிருந்தது. அவர்களுக்கு பசிவந்த போது, கருவாட்டை உண்டார்கள். கருவாட்டை தொடந்தும் வெயிலில் வைத்தார்கள். மாலையாகியதும், தாக உணர்வு மெல்ல எட்டிப்பர்த்தது சூழ

எங்கும் நீர் இருந்தும்........ குடிப்பதற்கு நீர் இருக்கவில்லை. அதிகரித்து வரும் தாகம், அவர்களது மன உறுதியையும் பொறுமையையும் உடைத்து விடும் போலிருந்நது. மழைபெய்தால் ஒழிய, குடிக்கும் நீர் அவர்களுக்கு கிடைக்கப் போவது இல்லை. மாலை ஐந்து மணி இருக்கும். வானத்தில் கருமேகங்கள் திடீர் என்று குவியத் தொடங்கின. அவர்கள் கருவாடுகளை பத்திரமாக கட்டிவைத்தார்கள். காற்று குளிர்வடைந்தது போல, அவர்கள் உள்ளங்களும் குளிர்வடைந்தன. மழைநீரை சேகரிப்பதற்கு........ கேன், பொலித்தின், சிரட்டை, கோப்பை என பல பொருட்களை ஆயத்தமாக வைத்திருந்தனர்.

மூவரும் வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

வாடிய மரங்களும், மந்தைகளும் வானமழையை எதிர்பார்ப்பது போல, அவர்களும் மழைத்துளிகளுக்காக காத்து நின்றார்கள்.

“காத்து நல்லா வீசுது........ மழை வராது போல........” இஸ்மாயில் சொன்னார்.

அவர்கள் பார்த்திருக்கும் போதே........

வேகமான காற்றின் காரணமாக,

கருமேகங்கள் கலைந்து சென்றன.

மழை பெய்யும் என்ற அவர்களது எதிர்பார்ப்பும், கலைந்து போனது.

இதுவரை........

உள்ளத்தைக் குளிரவைத்துக் கொண்டிருந்த அவர்களது நம்பிக்கை மேகம், கலைந்து சென்றது.

மௌனமாக அன்றிரவு........ கழிந்தது.

நன்கு உறக்கத்தில் இருந்த சரவணனின் கையில், ஏதோ விழுந்தது.

பதறி எழுந்த அவர் சுற்றுமுற்றும் பார்த்தார்.

மற்ற இருவரும், ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்கள்.

என்ன நடந்தது........? என்று யோசிப்பதற்குள் ........

மழைத்துளி, அவரது முகத்தில் பட்டுத்தெறித்தது.
தொடர்ந்து சிலதுளிகள், அவரது உடலில் பட்டன.
வானத்தை நோக்கினார்.
வழமையாக கண்சிமிட்டும் நட்சத்திரங்களைக் காணவில்லை.
மழை பெய்யப் போகின்றது என்பது
அவருக்கு நிச்சயமாகிவிட்டது.
உடன் மற்ற இருவரையும் எழுப்பினார்.
அவர்கள் எழும்புவதற்குள்........ மழை பெய்யத் தொடங்கியது.
எல்லோரும் ........ மழைநீரை சேகரிப்பதில் ஈடுபட்டார்கள்.
வயிறு நிறைய மழைநீரைக் குடித்தார்கள்.
பாத்திரங்களில் பெற்ற நீரை, கேனில் ஊற்றினார்கள்.
மழை சற்று கடுமையாகவே பெய்தது.
குறிப்பிட்ட பாத்திரங்களே இருந்ததால், அதிகளவில் நீரைச் சேகரிக்க முடியவில்லை.
சேகரித்த நீர், மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் போதுமானதாக இருந்தது.
குடிநீரின் அருமையை, பகல் முழுமையாகவே உணர்ந்தார்கள்.
அவ்வாறான நீர் வீணாகிச் செல்வது, அவர்களுக்கு கவலையாக இருந்தது.
கடல் பயணத்தில் பெரிய பாத்திரம் அவசியமானது என்பதை, மூவரும் உணர்ந்தார்கள்.
உக்கிரமாகப் பெய்தமழை, சிறிது நேரத்தில் தணிந்தது.
அவர்களது ஆடைகள், முற்றாக நனைந்தன.
எனினும், அவர்கள் சந்தோசமாக இருந்தார்கள்.
குடிநீர் கிடைத்ததாலும்,
காய்ந்திருந்த அழுக்குடைகளும், உடல்களும் கழுவப்பட்டதாலும் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.
அதன் பின்பு........
ஈர உடைகள், அவர்களது தூக்கத்திற்கு தடைபோட்டன.

தூக்கம் தொலைந்தாலும் ........
குடிநீர் கிடைத்துவிட்டதே என்ற நினைப்பு,
அவர்களை மகிழ்ச்சி அலைகளில் மிதக்க வைத்தது.
அடுத்த நாள் ........
சூரியனது கதிர்கள் தந்த வெப்பம்,
அவர்களுக்கு இதமாக இருந்தது.
உடைகள் மெல்ல மெல்ல காயத்தொடங்கின.
இரவு, முழுவதும் விழித்திருந்ததனால் ........
அவர்களுக்கு கடுமையான பசி ஏற்பட்டது.
கருவாட்டைச் சாப்பிட்டு, மழைநீரைக் குடித்தார்கள்.
மழைநீர் மிகவும் சுவையாக இருந்தது.
இரண்டு நாட்களாக விழுந்த வெயிலும், இரவு பெய்த மழையும்
அவர்களுக்கு நன்மைகளையே தந்தன.
அவற்றின் மூலம் உணவும், குடிநீரும் தந்த இறைவனுக்கு,
அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.
அன்று இரவு........
உடலும் உள்ளமும் நிறைந்தவர்களாக,
படுக்க ஆயத்தமானார்கள்
இப்போதெல்லாம் ........
படகில் கையை, தலையணையாய் பாவித்துப் படுப்பது,
அவர்களுக்கு பழக்கப்பட்டுப் போனது.
நள்ளிரவு நேரம் ........
அதிகாலை ஒருமணி இருக்கும்.
சேகுத்தம்பிக்கு விழிப்பு ஏற்பட்டது
தூக்கம் கண்களில் மூடிக்கொள்ள மறுத்தது.
வாய் உலர்ந்திருந்தது.
எழுந்து, நீர் அருந்தினார். ........ அருந்தும் போது........
தூரத்தில் அவர் கண்ட காட்சி........
அவரை வியப்பில் ஆழ்த்தியது.

ஒரு பெரிய கப்பல் தூரத்திலிருந்து, அவர்களது படகு இருந்த பக்கமாக வந்துகொண்டிருந்தது.

வைத்தகண் வாங்காமல், சேகுத்தம்பி அதனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தான் கண்ட காட்சியை அவரால் நம்ப முடியவில்லை.

அவர் வியப்பின் எல்லைக்கே சென்றார்.

இது நமக்கு விமோசனத்தைத் தருமா........?

அவரது உள்ளத்தில் நம்பிக்கை ஒளி, திடீரென்று பிரகாசத்துடன் ஒளிர்ந்தது.

அவர் சந்தோசத்தில், கைதட்டி பெரிதாகச் சிரித்தார்.

அந்த சத்தத்தினால் ........

ஏனையோரும் எழுந்தார்கள்.

அவர்களும் ........

தூரத்தில் வந்து கொண்டிருந்த கப்பலைப் பார்த்தார்கள்.

தங்களது துயரம் முடியப் போகிறது என்பதை,

நினைத்து அனைவரும் குதூகலித்தார்கள்.

கப்பல் வேகமாக வந்து கொண்டிருந்தது.

அது அருகில் வந்த போதுதான் ........

தமது படகை நோக்கிவரவில்லை என்பதை, அவர்கள் உணர்ந்தார்கள்.

அவர்களது படகிலிருந்து சிறிது தூரத்திற்கு அப்பால்,

அக்கப்பல் சென்று கொண்டிருந்தது.

அவர்களுக்கு அது பெரும் ஏமாற்றமாக இருந்தது.

மூவரும் பெரும் சத்தமிட்டு அக்கப்பலை அழைத்தார்கள்.

ஆனால்........ கப்பலின் போக்கில், எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

தொடர்ந்து பெரிதாக சப்தமிட்டு அழைத்தார்கள்.

அக்கப்பலில் இருந்தவர்களுக்கு, இவர்களது சத்தம் கேட்டதாகத் தெரியவில்லை.

சிறிது நேரத்திற்குள் ........ அது.
வெகுதூரத்திற்கு விலகிச் சென்றது.
அவர்களது நம்பிக்கையும், அவர்களிடமிருந்து விலகிச் சென்றது.
மூவரும் செய்வதறியாது, பிரமை பிடித்தது போல நின்றார்கள்.
அற்புதமாகக் கிடைத்த ஒரு சந்தப்பம் ........ வீணாகிவிட்டது.
நல்ல ஒரு சந்தர்ப்பம், கை நழுவிப் போனது.
அவர்கள் மூவரும் கவலையில் ஆழ்ந்தனர்.
"நாம சூள்லாம்பக் கொழுத்தி அசைச்சி இருந்தா, கப்பல் வந்திருக்கும் ........" சரவணன் சொன்னார்.
அனைவருக்கும் அப்போதுதான் தமது தவறு புலப்பட்டது.
கப்பலைக் கண்ட மகிழ்ச்சியினால், இந்த யோசனை அவர்களுக்கு அப்போது வரவில்லை.
இப்போது அதைப்பற்றிக் கவலைப் பட்டுப் பயனில்லை. இன்னொரு முறை சந்தர்ப்பம் கிடைத்தால், இந்தத் தவறை மீண்டும் செய்யக் கூடாது.
அன்றிரவு........
ஒருவரும் உறங்கவில்லை. கண்களை மூடியவுடன், கப்பல் அவர்களை நோக்கி வருவதும், பின்பு விலகிச் செல்வதுமே, அவர்களுக்கு தெரிந்தன. அந்த நினைவிலிருந்து அவர்களால் மீள முடியவில்லை.
மாபெரும் வாய்ப்பு மிக அருகில் வந்தும்,
அது அவர்களுக்கு பயன்படவில்லை.
கடல் இரைச்சலைத் தவிர........
அமைதியே அங்கு ஆட்சி செய்தது.
வானத்தை அண்ணாந்து பார்த்தபடி,
மூவரும் படகில் படுத்தனர்.
கண்சிமிட்டும் நட்சத்திரங்களுக்கு மத்தியில், இளம்பிறை இனிய ஒளியை உமிழ்ந்தது.
கொத்துக் கொத்தாய் ........

வானப் பூங்காவில்,
மேக மலர்கள், மலர்ந்து எழில் காட்டின.
தமக்கும் பொன்னொளி தந்த அழகுபடுத்திய, நன்றியையும் பாராது, கருமேகங்கள் இளஞ்சந்திரனை முட்டி மோதி உள்ளம் மகிழ்ந்தன.
நிலாப் பெண்,
மெல்லிய மேகத்திரைக்குள் மறைந்தபோது,
மணப்பெண்ணின் அழகுடன் விளங்கினாள்.
அந்த நீண்ட இரவு........
கதிரவனின் உதயத்தால் காணாமல் போனது.
காலைக் கதிரவனின் வருகையினால், தோற்றம் பெற்ற பகலும் நீண்டு தேய்ந்தது.
நாட்கள் சில சென்றன.
எனினும் வந்து சென்ற கப்பல், அவர்களது உள்ளத்தில் ஏற்படுத்திய துயர அலைகள்,
இன்னும் ஓயாமல் இருந்தன.
அந்த நினைவலைகளிலிருந்து, அந்த மூவரும் மீளமுடியாமல் தவித்தார்கள்.
அவர்களிடமிருந்த நீரும், கருவாடும் குறைவடைந்தது போல, அவர்களது நம்பிக்கையும் குறைவடைந்தது. கப்பல் அவர்களைக் கைவிட்டுப் போனதிலிருந்து, அவர்களது உள்ளத்திலிருந்து மகிழ்ச்சியும், உடலில் இருந்து உற்சாகமும் கைவிட்டுப் போயின.
அச்சம்பவம் நடந்து நான்காவது இரவு........
முகத்தில் மழைத்துளி விழுந்ததனால், இஸ்மாயில் பதறி எழுந்தார்.
வானத்தை அண்ணாந்து பார்த்தார்.
அவர்களுக்கு மேலால் சிறிய கருமுகில் கூட்டம்........

சந்திரனைவிட்டுப் பிரிவது, மேகத்திற்கு துயரை ஏற்படுத்தியதால்தான், அது கண்ணீர் சிந்தியதோ? ஒரு சில மழைத்துளிகள் மாத்திரமே உடலில் விழுந்தன.

மற்ற இருவரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர்.

இஸ்மாயிலுக்கு நித்திரை கலைந்து விட்டது.

சிறிது நேரம் படகில் இருந்து கொண்டே

பல்வேறு சிந்தனையில் ஆழ்ந்தார்.

அவர் நீண்ட நேரம் இருந்த பின்பு........

படுக்கலாம் எனறு எண்ணியவேளையில்

தூரத்தில் ........

மங்களான ஒரு வெளிச்சம் தெரிந்தது.

அதனை வைத்த கண் வாங்காமல் பார்த்தார்.

அந்த வெளிச்சம் படிப்படியாக பெரிதாகியது.

"தான் காண்பது கனவா? அல்லது

நனவா?" என்று அவருக்கு சந்தேகமாக இருந்தது.

கண்களை மூடிக்கொண்டு திரும்பவும்,

அந்த வெளிச்சத்தை நோக்கினார்.

இப்போது........

வெளிச்சம் பெரிய அளவில் தெரிந்தது.

படகோ? கப்பலோ? ஏதோ ஒன்று, தங்களை நோக்கி வருவது, அவருக்கு நிச்சயமாக விளங்கியது.

அதன்பின்பே, அவர் ஏனைய இருவரையும் எழுப்பினார்.

எழும்பியவர்களுக்கு, ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது.

மூவரும் அந்த வெளிச்சம் தெரிந்த திசையையே, நோக்கிக் கொண்டிருந்தனர்.

மிக நீண்ட நேரம் , அவர்கள்

பொறுமையுடன் காத்துக்கொண்டிருந்தார்கள்.

வெளிச்சம் இப்போது பெரிதாக ஆகியிருந்தது.

அது ஒரு பெரிய கப்பல் என்பது நிச்சயமாகியது.

சென்ற கப்பலுக்கு விட்ட தவறை, இந்தமுறை விடக்கூடாது.
எப்படியும் இக்கப்பலில் ஏறிவிடவேண்டும் என்று, அவர்கள் மனதிற்குள் சபதம் எடுத்துக் கொண்டனர்.
இப்போது அவர்களுக்கு, சிறிது தொலைவில் கப்பல் வந்து கொண்டிருந்தது.
இக்கப்பலும் அவர்களது படகிற்கு நேராய் வராமல்,
சிறிது தூரமாக வந்து கொண்டிருந்தது.
சரவணன் சூள்லாம்பை எடுத்துப் பற்றவைத்தார்.
அவசரமாக கொழுத்தியதால், நெருப்பு உடன் அணைந்தது.
இரண்டாவது முயற்சியில், லாம்பு பற்றவைக்கப்பட்டது.
இஸ்மாயில் லாம்பைப் பிடித்து ஆட்டினார்.
காற்று மிக வேகமாக வீசியதால், சூள்லாம்பு சில நிமிடங்களில் அணைந்தது.
கப்பல் தனது போக்கிலேயே சென்று கொண்டிருந்தது.
அதற்கும், இவர்களது படகிற்கும் உள்ள இடைவெளி அதிகரித்துக் கொண்டே சென்றது.
இக்கப்பலும் எம்மை கைகழுவிவிட்டுச் சென்று விடும் என்ற பயம், அவர்களுக்கு எழுந்தவேளையில்,
சரவணனுக்கு ஒரு யோசனை தோன்றியது........
அதன்படி அவர்,
தனது சட்டையைக் கழற்றினார்.
சட்டையைக் சவலின் ஒரு முனையில் சுற்றிக் கட்டினார்.
சூள்லாம்பிலிருந்த எண்ணெய் முழுவதையும், சட்டையில் ஊற்றினார்.
பின்பு அதனைப் பற்றவைத்தார்.
அதன் நெருப்பு பெரியதீபம் போலக்காட்சி தந்தது.
அதிலிருந்து வந்த வெளிச்சம் எங்கும் பரந்தது.
சரவணன் அந்தத் தீச்சுடரை, இருகைகளிலும் பிடித்து அசைத்தார்.
பத்து நிமிடங்களாக........ கைவலிக்க....... கைவலிக்க........

அவர் ஆட்டிக் கொண்டே இருந்தார்.
மூவரும் கப்பல் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.
கப்பல் செல்லும் பாதையில், சிறிய மாற்றம் தென்பட்டது.
நேராகச் சென்ற கப்பல், இப்போது திரும்பியது.
இவர்களது படகை நோக்கி, அது வந்து கொண்டிருந்தது.
அவர்கள் மகிழ்ச்சியின் உச்சியை அடைந்தார்கள்.
மூவரும் சந்தோச மிகுதியினால்,
கட்டித்தழுவினார்கள்.
ஆனந்தக் கண்ணீரை, அவர்கள்து விழிகள் உகுத்தன.
பத்து நிமிடங்களில்,
அவர்களது படகிற்கு அருகே கப்பல் வந்தது.
படகில் இருந்தவர்களால்,
அக்கப்பலை நன்கு பார்க்கக்கூடியதாக இருந்தது.
கப்பலில் இருந்தவர்கள், படகில் இருந்தவர்களிடம் ஏதோ கேட்டனர்.
படகில் இருந்தவர்களுக்கு, அவர்கள் பேசியமொழி விளங்கவில்லை.
படகில் இருந்தவர்கள் தமிழில் கதைத்தனர்.
பின்பு கப்பலில் இருந்தவர்களும், தமிழில் கதைத்தனர்.
சரவணன் தமது நிர்க்கதி நிலையை, சுருக்கமாகக் கூறினார்.
பின்பு கப்பலில் இருந்து, ஒரு கயிற்று ஏணி இறக்கப்பட்டது.
அக்கயிற்று ஏணியில், இஸ்மாயில் முதலில் ஏறினார்.
தொடர்ந்து சரவணனும், சேகுத்தம்பியும் ஏறினர்.
அவர்களுக்கு உடனடியாக உணவும், நீரும் வழங்கப்பட்டன.
களைப்பும், பசியும் மிகுந்திருந்த அவர்கள், அவ்வுணவை ஆர்வமாக உண்டனர்.
கப்பலில் கிடைத்த உணவும் நீரும், உடலுக்கும் உள்ளத்திற்கும் உற்சாகத்தை வழங்கின.
உணவு உண்டபின், கப்பல் கெப்டன் அவர்களோடு கதைத்தான்.

"உங்களுக்கு நல்ல காலம்........ இக்கப்பலில் உள்ள அநேகமானவர்களுக்குத் தமிழ் தெரியும். நாங்க சிங்கப்பூரிலிருந்து வாறோம். இரண்டு நாளிலே தென்னாபிரிக்காவுக்குப் போவம். ஆறு நாளில் வெனிசுலாக்குப் போவம். அங்க எண்ணெய் எடுத்திட்டு திரும்புவம். எப்படியும் உங்களை, உங்கட நாட்டுக்கு அனுப்புற வழியப் பார்க்கிறம். நீங்க அதுவரைக்கும் கப்பல்ல வேல செய்ங்க........

உங்களுக்கு சம்பளம் போட்டுத் தாறம். நல்லா வேல செய்தா, வீட்டுக்குப் போகக்குள்ள காசும் கொண்டு போகலாம் ........"

மூவருக்கும் கெப்டனின் வார்த்தைகள், மகிழ்ச்சியை ஏற்படுத்தின.

தமது ஆழ்ந்த நன்றியை வார்த்தையாலும், பார்வையாலும் அவர்கள் வெளிப்படுத்தினர்.

அவர்கள் செய்ய வெண்டிய வேலைகள் பற்றிக் கூற,

மூர்த்தி என்பவர் பணிக்கப்பட்டார்.

அவர்கள் செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை, அனைத்தையும் மூர்த்தி நன்கு விளக்கினார்.

அவர்களுக்கு மேலதிகமான பல உதவிகளையும் அவர் செய்தார்.

தமிழ் தெரிந்தவர்கள், அதிலும் மூர்த்தி இங்கு இருப்பது, எமது பாக்கியமே என்ற உணர்வு, மூவருக்கும் ஏற்பட்டது.

மூர்த்தி கப்பலில் இயந்திரப் பகுதியில் வேலை செய்தார்.

அவரது ஓய்வு நேரத்தின் பெரும்பகுதி, மூவருடனேயே கழிந்தது.

ஒரு நாள்.......

மூர்த்தி இஸ்மாயிலிடம்,

"கெப்டனைப் பற்றி என்ன நினைக்கிறீங்க........?"

"ஏன் என்ன விசயம்? ........"

"இல்ல........ சும்மாதான் கேட்டேன்"

"கெப்டன் நல்ல மனுசன்தானே........! எங்கட உயிரைக் காப்பாத்தி இருக்கார். நல்ல சாப்பாடு தாறார். ஊருக்குப் போகும்போது........ காசு தருவார்......."

"உண்மையில் கெப்டன் நல்லவன் இல்ல........ நல்லவன் போல நடிக்கிறான்."

அது இஸ்மாயிலுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"உயிரைக் காத்து, உள்ளம் மகிழ உரையாடிய கெப்டன், கெட்டவனா........ ?"

மூர்த்தி தொடர்ந்தார்.

"மனுசன்ட வெளிவேசத்தப் பார்த்து, முழுசா நம்பப்படாது. நான் சொல்லப்போற விசயத்த, யாருக்கிட்டயும் சொல்லக்கூடாது. போனவருசம்........ நாலு பேர் என்று நினைக்கிறேன். அவங்க மொரிசியஸ் ஆட்கள், அவங்களுக்கு ஆசை வார்த்தை காட்டி, தென்னாபிரிக்காவிலே அவங்கள வித்துப்போட்டார். அவங்கள விக்கிறத்துக்கு உதவி செய்தவர் எட்வட் ........ எட்வட் இப்ப இந்தக் கப்பலிலதான் இருக்கார். அவருக்கிட்ட கேட்டா, எல்லா விசயங்களையும் சொல்லுவார் ........"

"என்னால நம்பவே ஏலாம இருக்கு........ இனிமே நாங்களும் கவனமா இருக்கிறம். நீங்க இந்த விசயங்கள சொன்னதற்கு நன்றி. நான் இதப்பற்றி மற்ற ரெண்டுபேருக்கிட்டயும் சொல்றன்."

இஸ்மாயில் கெப்படனைப் பற்றிச் சொன்ன தகவல்கள், சரவணனையும், சேகுத்தம்பியையும் நிலைகுலைய வைத்தன.

இப்போதுதான் கடல் ஆபத்திலிருந்து மீண்டோம் ........ அதற்குள் ........ இன்னொரு ஆபத்தா........ ?

அவர்களது இதயங்கள், வேதனையில் ஆழ்ந்தன.

இதனை நம்பவும் முடியவில்லை........

நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

மூவரும் அடுத்த நாளே, எட்வட்டைச் சந்தித்தார்கள்.

எட்வட் சொன்ன தகலவ்கள், அவர்களுக்கு மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தின.

"உங்களால் கெப்படனுக்கு நல்ல வருமானம் கெடைக்கும். நீங்க மூணு பேரும், நல்ல வாட்சாட்டமா இருக்கீங்க.......

ஒரு ஆளுக்கு குறைந்தது மூவாயிரம் டொலராவது கிடைக்கும்.

நீங்க மூவரும் சாகும் வரை அடிமையாக இருக்கணும்."

மூவரும் மிகுந்த கவலையில் ஆழ்ந்தார்கள்.

இப்போது என்ன செய்வது........?

தென்னாபிரிக்காவில் நாம் இறங்கவே கூடாது. ஏதாவது சந்தேகத்திற்கு இடமாக கெப்டன் நடந்தால், அவரை தாக்கிவிட்டு தப்பிப்பது என்று , மூவரும் திட்டமிட்டார்கள்

அடுத்த நாள் ........

மூவருக்கும் கெப்டனோடு கதைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவரை நன்கு அவதானித்தார்கள். எவ்வித மாற்றத்தையும் அவரிடம் காணமுடியவில்லை.

அவர் இயல்பாகவே இருந்தார்.

வழக்கமான அதே புன்னகை........

கருணைததும்பும் அதே வார்த்தைகள் ........

'பசுத்தோல் போர்த்திய புலி' என்பது இவர்தானோ........?

அவரது கண்களை நோக்கும்போது........ மூர்த்தி சொன்னது பொய்யாக இருக்குமோ என்று தோன்றியது.

இரண்டு நாட்களில் ........

தென்னாபிரிக்காவின் கேப்டவுண் துறைமுகத்தை கப்பல் அடைந்தது.

ஒரு நாள் தரித்து எரிபொருளை நிரப்பிக்கொண்டு,

வெனிசுலா நோக்கிய தனது பயணத்தை, கப்பல் ஆரம்பித்தது........

கேப்டவுணிலிருந்து புறப்பட்ட மறுநாள்,

இஸ்மாயிலைச் சந்தித்த சரவணன்,

"மூர்த்தியினதும், எட்வட்டினதும் நடவடிக்கைகள் ஒருமாதிரியாக இருக்கு........" என்று கூறியதும்,

இஸ்மாயில் அதிர்ந்தார்.

சரவணன் தொடர்ந்தார்.

"இரவு நடுச்சாமம் பாத்ருமுக்குப் போனேன். போய்வரும் போது, நங்கூரமெல்லாம் போட்டிருக்கிற இருட்டறைக்குள்ள, ஒரு சத்தம் கேட்டுது........ கிட்டப்போய் அவதானிச்சேன்.

அந்த இருட்டறைக்குள்ள, யாரோ கதைக்கிற மாதிரி இருந்தது. அந்த நேரத்தில் யாரு கதைக்கிறாங்க........ என்று எனக்கு சரியான யோசன........ யார் ஆட்கள் என்று அறிய இருட்டான இடத்தில நானும் ஒளிச்சிட்டு இருந்தன்.

அதிக நேரத்திற்குப் பிறகு எட்வெட் வெளியே வந்தார்.

அவர் நாலு பக்கமும் பார்த்திட்டு, சைகை காட்டினார்.

பின்பு மூர்த்தி வெளியே வந்தார்.

அவங்க பதுங்கிப் பதுங்கிப் போனாங்க.

அவங்களப் பார்த்தா நல்ல ஆக்கள் மாதிரி இல்ல........"

சரவணன் கூறியதைக் கேட்டு, இஸ்மாயிலுக்கும் பெரிய யோசனையாக இருந்தது.

யாரை நம்புவது........?

மூர்த்தியையும், எட்வெட்டையும் நன்கு அவதானிப்பது என்று, இருவரும் முடிவெடுத்தனர்.

மறுநாள் ........

இதுபற்றி அவர்கள் சேகுத்தம்பியிடம் தெரிவித்தார்கள்.

ஆனால் சேகுத்தம்பி அதுகேட்டு ஆச்சரியமடையவில்லை. அவருக்கு மூர்த்தியினது நடத்தை, சந்தேகத்தை ஏற்கனவே ஏற்படுத்தியிருந்தது.

இனிமேல் ஒவ்வொரு இரவும்,

மூர்த்தியையும் எட்வெட்டையும் இரகசியமாக அவதானிப்பது என்று, மூவரும் தீர்மானித்துக் கொண்டார்கள்.

மூர்த்தியும் எட்வெட்டும் தங்கும் அறையில், காந்தன் என்பவரும் இருந்தார்.

காந்தனோடு கதைத்து, அவரது நிலையை அறிய, அவர்கள் விரும்பினார்கள்.

சரவணன் காந்தனோடு கதைத்தார்.

கப்பலில் சேரமுன்பு, அவன் அனுபவித்த இன்னல்களையும், தற்போது அவனது குடும்பம் நிம்மதியாக வாழ்வதையும் காந்தன் சுட்டிக் கட்டினார்.

அப்படியானால் ........

மூர்த்தி, எட்வெட் ஆகியோரின் மர்மநடவடிக்கைகளுக்கும், இவருக்கும் சம்பந்தமில்லை.

அவர்களைப் பற்றி அறிய, இவரது உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை, சரவணனுக்குத் துளிர்த்தது.

அந்த நம்பிக்கையின் பலனாக........

நடந்தவற்றை, காந்தனுக்கு சரவணன் கூறினார்.

காந்தனின் கண்கள், ஆச்சரியத்தால் அகலவிரிந்தன.

காந்தன் முழுவதையும் கேட்டபின்பு,

“நானும் இது விசயத்தில் உங்களுக்கு உதவுவேன். கப்பல் கெப்டனுக்கு நன்றியுள்ள விசுவாசியாகத்தான், இந்தக் காந்தன் எப்பவும் இருப்பான் ........”

காந்தனின் கண்களில் ஆவேசம் தெரிந்தது.

மூர்த்தியையும், எட்வெட்டையும் கண்காணிக்கும் குழுவின் அங்கத்தவர்களின் தொகை, நான்காக உயர்ந்தது.

நான்கு பேரும், மூர்த்தியினதும் எட்வெட்டினதும் பெட்டிகளை ஆராய்வது எனத் தீர்மானித்தார்கள்.

அடுத்தநாள் ........ நள்ளிரவில் ........

வழமையாகச் சந்திக்கும் இருட்டறையில்,

மூர்த்தியும், எட்வெட்டும் சந்தித்தனர்.
இஸ்மாயில் இருட்டறைக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருக்க, இடையில் சேகுத்தம்பி நின்றார்.
காந்தன் அறைக்குள் பெட்டிகளை பரிசோதித்துக் கொண்டிருந்தார்.
மூர்த்தி வெளிவந்தவுடன் காந்தனுக்கு தகவல் சொல்வதற்கு, மூவரும் தயாராக இருந்தனர்.
முதலில் காந்தன் எட்வெட்டின் பெட்டியைத் திறந்தார்.
அந்தப் பெட்டியினுள், வித்தியாசமான பொருட்கள் எதுவும் இருக்கவில்லை.
பின்பு காந்தன், மூர்த்தியின் பெட்டியைத் திறந்து பார்த்தார்.
அவருடைய பெட்டியிலும் வித்தியாசமான பொருட்கள் இருக்கவில்லை. பெட்டியின் அடியில் ஒரு மட்டை இருந்தது.
அந்த மடடையின் கீழ்........
சில கடிதங்கள் இருந்தன.
ஒவ்வொரு கடிதத்தையும், காந்தன் விரித்துப் பார்த்தார்.
ஒரு கடிதத்தில், ஒரு கப்பலின் படம் இருந்தது. இக்கப்பலில் FG POTA NIGO என்று குறிப்பிடப்பட்டிருந்தது.
அக்கடிதத்தைக் காந்தன், பத்திரப் படுத்திக் கொண்டார்.
சற்று நேரத்தில்,
மூர்த்தியும், எட்வெட்டும் இருட்டறையிலிருந்து வெளியே வந்துள்ளார்கள் என்ற தகவல், இஸ்மாயில், சேகுத்தம்பி, சரவணன் வாயிலாக காந்தனுக்குக் கிடைத்தது,
அவர்கள் வந்தபோது, காந்தன் நித்திரை செய்வது போல் நடித்தார்.
அறைக்குள் வந்த அவர்கள் இருவரும், காந்தன் படுப்பதைப் பார்த்து, திருப்தியடைந்தவர்களாக படுக்கைக்குச் சென்றார்கள்.
மறுநாள் ........
காந்தனும், சரவணனும் கப்பல் கெப்டனுக்கு, ஆரம்பத்திலிருந்து நடந்ததைப் பற்றிக் கூறினார்கள்.

கெப்டனுக்கு அத்தகவல்கள், அதிர்ச்சியை ஏற்படுத்தின.

அவரால் அதனை நம்பமுடியவில்லை.

இறுதியாக, காந்தன் மூர்த்தியின் பெட்டிக்குள் எடுத்த கடிதத்தைக் காட்டினார்.

கடிதத்தைக் கண்டவுடன்........ கெப்டன் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றார்.

கடிதத்தில் இருந்த FG POTA NIGO என்பது, இதே கம்பனிக்குச் சொந்தமான, ஒரு கப்பலின் பெயர். அது போன வருடம் செங்கடலில் மூழ்கியது.

கடித்தின் விபரங்கள், கெப்டனுக்கு விளங்கவில்லை.

கடித்தில் உள்ள சில எழுத்துக்களையும், குறியீடுகளையும் சிங்கப்பூரிலுள்ள தனது தலைமை அலுவலகத்திற்கு அறிவித்தார்.

அரை மணித்தியாலத்தின் பின்பு,

சிங்கப்பூரிலிருந்து வந்த தகவல்கள், அனைவரையும் அதிர்ச்சிக் -குள்ளாக்கின.

“சென்ற வருடம் கப்பல் கடலில் மூழ்கியமைக்கு சதிவேலையே காரணமாகும்........ இச்சதிக்கான பின்னணியை அறிய வேண்டும். இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுங்கள்”

இச்செய்தி கப்பல் கெப்டனை, விழிப்படைய வைத்தது.

சிறிது நேர மௌனத்தின் பின் கெப்டன்,

“மூர்திதியினதும் எட்வெட்டினதும் நடவடிக்கைகளை, நாம் கவனமாக கண்காணிக்க வேண்டும். அவர்கள் சந்தேகப்படாதவாறு, நாம் நடந்து கொள்ள வேண்டும். இதற்கு என்ன செய்யலாம்........?”

ஒவ்வொருவரும் தமது கருத்துக்களைச் சொன்னார்கள்.

இஸ்மாயிலின் திட்டம்தான், இறுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இஸ்மாயில் சொன்னத் திட்டப்படி,

மறுநாள் பகல்,

வழக்கமாக மூர்த்தியும் எட்வெட்டும் சந்திக்கும் அறையில், ஒரு சிறிய டேப்ரெக்கோட் வைக்கப்பட்டது.

அதனை வெளியில் இருந்து பார்த்தால், பார்க்கமுடியாது.

கெப்டனும் ஏனையோரும் இரவை, ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

பகல்வேளை, நீண்டு பின்பு மெல்ல மெல்லத் தேய்ந்தது.

நேரம் நள்ளிரவை அண்மித்தது.

மூர்த்தியும், எட்வெட்டும் தமது அறையிலிருந்து வந்தார்கள். சுற்றுமுற்றும் பார்த்தார்கள்.

யாரும் இல்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்ட பின்பு, இருவரும் மெதுவாக வழக்கமான இருட்டறையை அடைந்தார்கள்.

கெப்டன் உட்பட, ஐந்து பேர் வெளியே மறைவான இடங்களில், நின்று கொண்டிருந்தார்கள்.

நேரம் மிக மெதுவாக, நகர்ந்து கொண்டிருந்தது.

அனைவரும் பொறுமையோடு காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்திற்குப் பின்பு,

முதலில் எட்வெட் வெளியே வந்தார்.

அவர் வெளியே வந்து, யாருமில்லை என்பதற்கு அடையாளமாக, ஒரு சைகை காட்ட, மூர்த்தி வெளியே வந்தார்.

இருவரும் முன்னும், பின்னும் பார்த்த வண்ணம்,

தங்கள் அறைக்குள் சென்றார்கள்.

அறையில் காந்தன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததைக் கண்டு, நிம்மதியுடன் அவர்கள் படுக்கைக்குச் சென்றார்கள்.

மறுநாட் காலை........ 8 மணிக்கு.......

கெப்டனின் அறையில்........

காந்தன், சரவணன், இஸ்மாயில், சேகுத்தம்பி ஆகியோர் இருந்தார்கள்.

கெப்டன், மேசை மீது இருந்த டேப்ரெக்கோடரை இயக்கினார்.

“மூர்த்தி........ எல்லாம் சரியா........ பெற்றியும், கம்பியும் எடுத்திட்டன். வயர நீ எப்ப எடுப்பா........?”

"ஒரே இடத்தில் வயரக் கழட்டினா, எல்லோருக்கும் தெரிஞ்சிடும். அதனால 3,4 இடங்கள்ளதான் எடுக்கணும். இதுவரை 5யார் வயர எடுத்து வச்சிருக்கன் ........ இன்னும் 3 யார்தான் தேவ"

"சரி நம்மட திட்டத்திற்கு, இன்னும் எத்தனை நாள் இருக்கு"

"இன்னும் நாலு நாளில, வெனிசுலாவுக்கு கப்பல் போயிடும். போய் வரக்குள்ள, நாம விசயத்த முடிச்சாத்தான், நம்மட பொஸ் எல்லாம் தருவார். எண்ணெய் ஏத்தி வரக்குள்ள, கப்பல் தாண்டாத்தான், இவங்களுக்கு நல்ல நஸ்டம் வரும். இவங்களுக்கு நஸ்டம் எவ்வளவு வருகுதோ, அவ்வளவு நமக்கு வெகுமதி கிடைக்கும். ஐந்தாவது நாள் வெனிசுவெலாவிலிருந்து கப்பல் வெளிக்கிடும். ஏழாவது நாள், இரவு நாம வெடி வெச்சா சரி."

"நிச்சயமா........ நம்மட பொம் வெடிக்குந்தானே........"

"உனக்கிட்ட எத்தன தடவ சொல்றது? மூனுமாதம், நான் இதில ரெயினிங் எடுத்திருக்கேன். இருபது பொம்புக்கு மேலே, நான் வெடிக்க வைச்சிருக்கேன். நம்மட டைம்பொம், சரியா இரவு பன்னிரண்டு மணிக்கு வெடிக்கும். மெசின்ரூம்ல, பொம்ம வெக்கிறதினால, உடனே கப்பல் தீப்புடிக்கும். எண்ணெய் கப்பல்ல இருப்பதால, முப்பது நிமிசத்துக்குள்ள எல்லாம் முடிஞ்சிடும்."

"நாம எத்தின மணிக்கு, கடல்ல குதிக்கிற........?"

"பதினொன்று நாப்பத்தைந்துக்கு, நாம குதிச்சாப் போதும். மெல்ல மெல்ல ஏணிப்படியிலே இறங்கி, கடல்ல குதிச்சா சத்தம் கேட்காது. நாம நூறுமீற்றர் நீந்திப் போனாப் போதும். நமக்கு ஆபத்து வராது........"

"சரியா........ நம்மட ஆட்கள் எத்தின மணிக்கு வருவாங்க........"

"அவங்க தூரத்தில கப்பலப் போட்டுட்டு........ போட்டிலதான் நம்மளக் கொண்டு போகவருவாங்க........ நாம் அரை மணித்தியாலம், கடல்ல இருக்க வேண்டி வரும்."

“காந்தன் நம்மளோட இருக்கிறது, நமக்கு நல்லதாப் போயிட்டு. வேறு யாராக இருந்தாலும், என்ன ஏது என்று நம்மளத் துருவித் துருவி விசாரிப்பாங்க. அது சரி........ புதுசா வந்த........ சிறிலங்கா ஆட்கள் மூவரும் எப்பிடி........”

“நான் அவங்களையும், கைக்குள்ள போட்டிருக்கன். அவங்களும் நான் சொல்றபடி செய்வாங்க. எந்த நேரத்தில உதவி தேவைப்பட்டாலும், அவங்க எனக்கு உதவி செய்வாங்க.”

“சத்தம் போட்டுப் பேசாதே! ராச்சத்தம் ........ யாருக்காவது கேட்கப் போவுது.”

“யாருக்கும் கேட்காது........ இந்த நடுச்சாமத்தில, கப்பல ஓட்ற ஆட்களைத் தவிர, எல்லோருமே அசந்து தூங்குறாங்க. நம்மட விசயம் முடிஞ்ச பிறகு மூன்று நாளிலே நாம, அவுஸ்திரேலியாவில இருப்பம். அங்கே........ டார்வின் நகரத்தில ஆளுக்கொரு வீடும், ஒரு லட்சம் அவுஸ்திரேலியா டொலரும் நமக்குக் கிடைக்கும். குடியுரிமை எல்லாம் ஏற்கனவே முடிச்சாச்சி........ ஒன்டுக்கும் கவல இல்ல........”

“எனக்கென்டா, இதெல்லாம் நமக்கு கெடைக்குமா என்டு, கொஞ்சம் சந்தேகமாத்தான் இருக்கு........”

“போடா பைத்தியம் ........ போன வருசம் செங்கடலில விசயத்தை முடிச்ச ரெண்டுபேரும் ஜேர்மனியில, இப்ப செட்டில் ஆகிட்டாங்க. அங்க ரெண்டு பேருக்கும் தனித்தனி பங்களா இருக்கு. மாதம் இருபதினாயிரம் மாக் சம்பளத்திலே வேலை செய்யிறாங்க........ பொலீஸ் விசாரணை இல்லாம, நிம்மதியா அவங்க இருக்காங்க.”

“அப்படின்டா சரிதான்........ சரி நேரமாவுது........ நான் முன்னால போய், உனக்கு சிக்னல் தாறன்........”

கெப்டன் டேப்ரெக்கோட்டரை நிறுத்தினார்........

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஐந்துபேரும்,

அதிர்ச்சியிலிருந்து மீள, சில நிமிடங்களாயின.

அடுத்தடுத்து,

அதிர்ச்சியான தகவல்களை........

அவர்கள் அறிந்தமையால், அவர்களால் வாய்திறந்து கதைக்கக் கூட முடியாதிருந்தது.

இவ்வளவு பெரிய சதித்திட்டம், இந்தக்கப்பலில் நடந்து கொண்டிருக்கு........ இது பற்றி அறியாமல் இருக்கிறோம். என்று நினைக்கும் போது, கெப்டனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அதன்பின்பு, கெப்டன். கப்பலில் வேலை செய்யும் ஏனைய அதிகாரிகளுடன், இது பற்றிக் கதைத்தார்.

இனிமேல், எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று, அவர்கள் தீர்மானித்துக்கொண்டார்கள்.

மறுநாட் காலை........

மூர்த்தியையும், எட்வெட்டையும் கெப்டன் அழைப்பதாக, அலுவலகப் பணியாளன், வந்து கூறினான்.

இருவரும் மகிழ்ச்சியுடன், கெப்டனின் அறைக்குச் சென்றனர்.

கெப்டனின் புன்னகை அவர்களை வரவேற்றது........

“கப்பலின் வருமானத்தைக் கூட்ட, என்ன செய்யலாம் ........ என்று நாங்க இரு குழுக்களாகப் பிரிந்து, கலந்துரையாடப் போகின்றோம். நீங்கள் ரெண்டுபேரும் இரு குழுக்களிலும் சேர்ந்து கொள்ளுங்கள்” என்று அவர் கூறினார்.

இருவரும் வெவ்வேறு அறைகளில், இருந்த குழுக்களுடன் இணைந்தனர்.

மூர்த்தி போனதும், அறை தாளிடப்பட்டது.

அந்த அறைக்குள், மூவர் இருந்தனர்.

அவர்களுக்கு முன்னால், மூர்த்தி அமர்ந்தார்.

பல கேள்விக்கணைகள், மூவராலும் மூர்த்தி மீது தொடுக்கப்பட்டன.

“நீங்க எத்தின வருசமா இந்தக் கப்பலில் வேல வெய்யிறீங்க”

“ஒன்டரை வருசமா”

“உங்களுக்கு வீடு இருக்கா........?”

“ஆம்”

“எந்த நாட்டில........?”

“சிங்கப்பூர்ல........?”

“அவுஸ்திரேலியாவிலும் உங்களுக்கு வீடு இருக்கிறதாச் சொன்னாங்க........ உண்மையா........?”

மூர்த்திக்கு, உடல் வியர்த்தது.

நெற்றியில் அரும்பிய........ வியர்வைத் துளிகளை, அவர் தனது கைக்குட்டையாலே துடைத்துக் கொண்டார்.

அவர் பெரிய இக்கட்டில் இருக்கிறார் என்பதை, அவரது முகம் எடுத்துக்காட்டியது.

“சொல்லுங்க........ உங்களுக்கு அவுஸ்திரேலியாவில பங்களா இருக்கா........ இல்லியா........?”

மூர்த்தி பெரும் சங்கடத்துடன், ‘இல்லை’ என்று தலையசைத்தார்.

“உண்மையை மறைக்காதீங்க........ எல்லாம் எங்களுக்குத் தெரியும்........ கொஞ்சம் பொறுங்க........” கேள்வி கேட்டுக் கொண்டிருந்த மூவருள் ஒருவர், தொலைபேசியில் கதைத்தார்.

அவ்வாறு கதைத்தவர்,

“தம்பி மூர்த்தி........ அவுஸ்திரேலியா வீட்டு விசயத்த எல்லாம் எட்வெட் சொல்லிவிட்டான். இனிமே மறச்சிப் பயனில்ல........”

என்று சொல்லும் போது

மூர்த்தி திடீரென்று எழுந்து........

கதவைத் திறந்து கொண்டு, வெளியே ஓடினார்.

கப்பலில் இருந்து கடலில் பாய முயன்ற மூர்த்தியை,

ஏற்கனவே தயாராக இருந்த, கெப்டனின் ஆட்கள் பிடித்தனர்.

மூர்த்தியின் கைகளும், கால்களும் கட்டப்பட்டன.

அவரது முகம், பயத்தால் வெளிறியிருந்தது.

இந்தச் சூடான பகல் வேளையிலும் கூட, அவரது முகம் நடுங்கியது.

கைகள் கட்டப்பட்ட நிலையில்,

மீண்டும் கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டன.

"மூர்த்தி இனிமேல் எதையும் மறைச்சிப் பிரயோசனமில்லை. நீங்களாகவே எல்லாவற்றையும் ஒத்துக்கொண்டா, தண்டனை குறையும், நாங்களும் உங்களுக்கு சிபார்சு செய்வோம். இல்லாட்டி உங்களுக்கு கஸ்டம்தான். நல்லா யோசித்துப்பாருங்க........ உங்களுக்கு யோசிச்சுப் பார்க்கிறதுக்கு, ஒரு மணித்தியாலம் அவகாசம் தாறோம்."

கெப்டனும், ஏனையோரும் மூர்த்தியை தனிமையில் விட்டுவிட்டு அகன்றனர்.

ஒரு மணித்தியாலத்தின் பின்,

மூர்த்தி சகல உண்மைகளையும் சொல்லத் தொடங்கினார்.

"சிங்கப்பூரிலுள்ள இன்டிபெண்டன்ஸ் சிப்பிங் கொம்பனியில், என்ட உறவினர் ஒருவர், வேலை செய்யிறார். அவர்தான். என்னையும் எட்வெட்டையும் இந்தக் கப்பலில வேலை செய்யுமாறு சொன்னார். என்னைப் போல் பன்னிரண்டு பேர் வேறுவேறு கப்பல்ல வேலை செய்யிறாங்க. எல்லோருக்கும் பயிற்சி தந்தாங்க. பயிற்சியின் போது எடுத்த போட்டோ, என்ட றூமில இருக்கு........" என்று சொன்ன மூர்த்தி, கலங்கிய தன் கண்களைத் துடைத்தார்.

சற்று நேரம் கண்களை மூடிக்கொண்டிருந்தார்.

"ஏனைய கப்பல்களுக்கு நட்டத்தை ஏற்படுத்துவதுதான், எங்கள் நோக்கம். இந்தக் கப்பலை குண்டு வைத்து தகர்த்து, அதனை

தற்செயலா நடந்த விபத்து என்று மற்றவங்களை நம்பவைப்பது, எங்கள் பொறுப்பு........"

"போன வருசம் செங்கடல் விபத்து........ திட்டமிட்டசதி அப்படித்தானே"

"ஆம்........ அந்தக் கப்பலுக்க இரண்டு பேரை பொறுப்பாக்கினாங்க........ அவர்கள் இருவரும் தப்பியதோ, இப்போதும் அவர்கள் ஜேர்மனியில் வாழ்வதோ, வேறு யாருக்கும் தெரியாது........ அந்த ஆட்களின் விலாசமும், டெலிபோன் நம்பரும் என்னிடம் உள்ளன. 3333 222 110 என்பது எங்கட இரகசிய இலக்கம். இந்த இலக்கத்தைச் சொன்னா பயமில்லாம தொடர்பு கொள்வாங்க........"

மூர்த்தி சொல்லச் சொல்ல, முக்கிய விடயங்களைக் கெப்டன் குறித்துக் கொண்டார்.

"நீங்க சொன்ன பன்னிரண்டு பேரும் இப்ப எங்க வேலை செய்யிறாங்க என்று உங்களுக்குத் தெரியுமா........"

"அவர்களில் ரெண்டு பேரோடதான், நான் தொடர்பு கொண்டிருக்கேன். அவங்க சிங்கப்பூரிலதான் இருக்காங்க. எதிர்வரும் கிறிஸ்மஸ் அன்று, உங்கள் கப்பல் கம்பனிக்கு நெருப்பு வைக்கிறது, அவங்கட வேலை. மின்சார ஒழுக்கு தான் அதற்குக் காரணம் என்று பிறரை நம்ப வைப்பது, அவர்களது கடமை. அதற்கு இன்னும் நாலு மாதங்கள் இருக்கு. அவங்க ரெண்டு பேருக்கும், உங்கட ஒபிசிலே நல்ல மரியாதை, உங்கட பொஸ்ஸிக்கிட்ட நல்ல நம்பிக்கை, எங்களுக்குத் தரப்பட்ட முதலாவது அறிவுரை, நல்லா வேலை செய்து நம்பிக்கையைப் பெறவேண்டும் என்பதுதான்."

மூர்த்தியின் வாக்குமூலம், ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

அடுத்து அரைமணித்தியாலத்தில்,

சிங்கபபூருக்குத் தகவல்கள் சென்றன.

சிங்கப்பூரிலுள்ள கப்பல் உரிமையாளர் ஹென்றி மக்கலம், சிங்கப்பூர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுடன் தொடர்பு கொண்டார்.

அடுத்த சில நிமிடங்களில் ........

'இன்டிபென்டன்ஸ் சிப்பிங் கொம்பனி' சீல் வைக்கப்பட்டது.

அதே நேரத்தில்........

ஜேர்மனியில் வசித்துவரும், செங்கடல் கப்பல் விசயத்தோடு தொடர்புடையவர்கள் வீடுகளுக்கு முன்பு, பொலிஸ் வாகனங்கள் வந்து நின்றன.

ஹென்றி மக்கலத்திற்கு, எல்லாமே கனவில் நடப்பது போன்று இருந்தது.

இருட்டறையிலிருந்து, திடீரென்று வெளிச்சத்திற்கு வந்துவிட்டது போன்ற உணர்வு, அவருக்கு ஏற்பட்டது.

அவருக்கு எதிராகப் பின்னப்பட்ட சதிகளை அகற்ற உதவிய, இலங்கையைச் சேர்ந்த மூவரையும், காந்தனையும் ஆரத் தழுவத் துடித்தது, அவரது உள்ளம்.

அவர்கள் சென்ற கப்பல் வெனிசுவெலாவை அடைந்தபோது........

அத்துறைமுகம், விழாக்கோலம் பூண்டிருந்தது.

காந்தன் உட்பட சதியைக் கண்டுபிடித்த நால்வருக்கும், செங்கம்பள வரவேற்பு வழங்கப்பட்டது.

வரவேற்பை ஒழுங்கு செய்த ஹென்றிமக்கலம், அந்த நால்வரையும் கட்டி அணைத்தார். அந்த அணைப்பு, காலமெல்லாம் நான் உங்களுக்கு நன்றியுடையவன் என்பதனை வெளிப்படுத்தியது.

வாழ்த்துக்களாலும், பரிசில்களாலும் நால்வரும் திக்குமுக்காடினர். அன்றைய தினமே இலங்கைக்கு விமானத்தில் பயணமாக இருக்கிறோம் என்பதை அறிந்த இலங்கையர் மூவரும், வியப்பின் எல்லைக்கே சென்றார்கள்.

"நண்பர்களே! உங்கட நாட்டுக்கு, உங்கட வீட்டுக்கு பத்திரமாய் உங்களைச் சேர்த்த பின்புதான், நான் அடுத்த வேலையைப்

பற்றிச் சிந்திப்பேன்.'' என்ற ஹென்றி மங்கலத்தின் வார்த்தைகள், அவரின் அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தின. இரு நாட்கள் விமானப்பயணத்தின் பின்பு, அவர்கள் சொந்த ஊரை அடைந்தார்கள்.

மூவரைப்பற்றியும் ஒரு விபரமும் தெரியாது, துயரத்தில் மூழ்கியிருந்த ஊரவரும், உறவினரும் அவர்களை நேரடியாகக் கண்டதும், எல்லையற்ற இன்பத்தில் திளைத்தார்கள்.

பிரிந்தவர்கள் சேர்ந்ததனால், அங்கு பேச்சு எழவில்லை.

கண்ணீரே உணர்வுகளை வெளிப்படுத்தியது

உள்ளத்தில் இருந்த துயரங்களெல்லாம், கண்ணீராய் மாறி வெளியேறியதனால்,

இதயங்களில் இன்பம் மாத்திரம், தற்போது எஞ்சியிருந்தது.

மூவருக்கும் தலாஐம்பது இலட்சம்ரூபா பெறுமதியான காசோலைகளை வழங்கிய ஹென்றி மக்கலம்.

“நான் இனி ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கு வருவேன், உங்களைப் பார்க்க........'' என்று கூறிய போது அனைவரது உள்ளங்களும் நெகிழ்ந்தன.

# ஆசிரியரின் நூல்கள்



## இலக்கியம்

1. இதய ஒலி (கவிதைத் தொகுதி)
2. தியாகி (சிறுகதைத் தொகுதி)
3. நடுக்கடலில் (சிறுகதைத் தொகுதி)
4. காட்டுராஜா (சிறுவர் நாவல்)
5. மரணத்தின் விளிம்பில் (சிறுவர் நாவல்)
6. விடிவெள்ளி (சிறுவர் நாவல்)
7. தாய்மை (சிறுவர் கதைகள்)
8. பாட்டி சொன்ன நீதிக்கதைகள்
9. மூதூர் உமறு நெய்னாப் புலவரின் கவிநயம் (ஆய்வு)
10. கடலின் நடுவில் (நாவல்)
11. தாமரையின் ஆட்டம் (சிறுவர் கவிதைகள்)

## கல்வி (புதிய பாடத்திட்டம்)

12. வரலாறு தரம் 11
13. புவியியல் தரம் 11
14. வரலாறு தரம் 10
15. புவியியல் தரம் 10
16. புவியியல் தரம் 9
17. குடியிரிமைக் கல்வி தரம் 9
18. வரலாறு தரம் 7
19. புவியியல் தரம் 7
20. வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் தரம் 7
21. வரலாறு தரம் 6
22. புவியியல் தரம் 6
23. குடியுரிமைக் கல்வி தரம் 6